ஓம்

# உபகுப்தர்

(நாடகங்கள்)

சு. குருசாமி, பி. ஏ., எல். டி.

அருணோதய நிலையம்
வேலூர் சேலம்

முதற் பதிப்பு: பிப்ரவரி, 1947
உரிமை பதிவு செய்யப்பட்டது

விலை ரூபாய் 2—0—0

அச்சிட்டோர்:
மதருஸ் ரிப்பன் பிரஸ், ராமச்சந்திரபுரம்
புதுக்கோட்டை சமஸ்தானம்

# முன்னுரை

இந்நாடகங்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்றவாறு எழுதப் பட்டிருக்கின்றன. பாத்திரங்களின் எண்ணிக்கை குறைவாயிருந்தால் நடிப்பதற்குச் சௌகரியமா யிருக்கும் என்ற நோக்கத்துடனேயே தயாரிக்கப் பட்டுள. அரங்கிலும், அம்பலத்திலும் இவைகளைத் தமிழ் மக்கள் ஆதரிப்பர் என்று நம்புகிறேன். இந்நாடகங்களைத் தங்கள் பத்திரிக்கைகளிலும், மாதம் ஒரு புத்தகத்திலும் பிரசுரித்து உதவிய ஆசிரியர்களுக்கு எனது நன்றி உரித்தாகும்.

சா. குருசாமி

# பதிப்புரை

தமிழ் இலக்கியத்தில் நாடகங்கள் மிகக் குறைவு. அக் குறையை நிவர்த்தி செய்யவே எங்கள் இரண்டாவது வெளியீடாக, இந் நாடகங்களைப் பிரசுரிக்கிறோம். தமிழ் மக்கள் ஆதரவு இருக்கும் என்று நம்புகிறோம்.

இந்நாடகங்களை நடிக்க விரும்புவோர் எங்கள் அனுமதி பெற வேண்டும்.

அருணோதய நிலையம்

TAMILSANGAM

## உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| 1. | உபகுப்தர் | ... | 9 |
| 2. | பாரியின் பரி | ... | 39 |
| 3. | பிள்ளையா பூதமா ? | ... | 59 |
| 4. | கண்ணாடி வீடு | ... | 77 |
| 5. | கருணை | ... | 91 |
| 6. | நோய் வராதா ? | ... | 103 |
| 7. | குடியலூர்ச் சந்தை | ... | 123 |

# உபகுப்தர்

## பாத்திரங்கள்

*உபகுப்தர்*: அசோக மகாச் சக்கரவர்த்தியின் குருவும், முற்றத் துறந்த முனிவருமாகிய ஒரு பௌத்த பிக்ஷு

*வாசவதத்தை*: பாடலிபுத்திரம் முழுவதும் அழகிற் சிறந்த ஒரு தாசி.

*ராதா*, *ஹீரா*, *மாயா* — வாசவதத்தையின் தோழிகளும், பணிப் பெண்களும்.

*சில கழுகுகள்!*

THE MADURA TAMIL SANGAM

# முதல் அங்கம்

## முதற் காட்சி

**இடம் :** அசோக சக்ரவர்த்தியின் தலை நகரமாகிய பாடலிபுத்திரம்

[இரவு நேரம். பாடலிபுத்திரத்தில் மூன்றுமாடிகள் உள்ள ஓர் அழகிய மாளிகை. படுக்கை யறையில் பாடலிபுத்திரம் முழுவதிலும் அழகிற் சிறந்த வனிதை என்று பெயர் பெற்ற தாசி **வாசவதத்தை**, தந்தக் கட்டிலில், பட்டு மெத்தையின் மீது படுத்துப் புரண்டு கொண்டிருக்கிறாள். அவளுடைய வேலைக்காரியும், தோழியுமான **ராதா** உள்ளே நுழைகிறாள்.]

**ராதா :** பொழுது விழுந்து பத்து நாழிகைக்கு மேல் ஆகிறதே, அம்மா! ஏதாவது சாப்பிடக் கூடாதா? எல்லாம் ஆறி, அலர்ந்து போகிறதே.

**வாசவதத்தை :** எனக்கு ஒன்றும் வேண்டாமடி ராதா. நீ சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொள்.

**ராதா :** உடம்புக்குச் சௌகரியம் இல்லாவிட்டால், வெறும் கிச்சடியாவது சாப்பிடுங்களம்மா. சிறிது கொண்டு வரட்டுமா?

**வாசவதத்தை :** ஒன்றும் வேண்டாம்.

**ராதா :** அப்படியானால் கொஞ்சம் பாலாவது சாப்பிட்டுவிட்டுத் தூங்குங்கள். கொண்டு வருகிறேன். (அறையை விட்டுச் செல்லுகிறாள். சிறிது நேரத்தில் ஒரு வெள்ளி டம்ளரில் பால் எடுத்துக்கொண்டு மீண்டும்

அறைக்குள் நுழைகிருள்) எழுந்திருங்களம்மா! இதோ கொண்டு வந்திருக்கிறேன்.

வாசவதத்தை: (மிகுந்த கோபத்துடன்) போடி வெளியே! அந்த வதை போதாதென்று நீயும் ஏண்டீ என்னை இப்படி வதைக்கிருய்? கொஞ்ச நேரமாவது என்னை நிம்மதியா யிருக்க விடு.

(ராதா பயத்துடன் வெளியே செல்கிருள்.)

வாசவதத்தை: நிம்மதி! நிம்மதி! எனக்கு ஏது இனி நிம்மதி? ஐயோ என் மனம் ஒரு நிலையில் இல்லை. இந்தச் சமயம் பக்கத்தி லிருந்தாலாவது சற்று ஆறுதலா யிருக்குமே. அவள் எங்கே தொலைந்து விட்டாள்? அடீ ராதா! ராதா! எங்கடீ அதற்குள் தொலைந்து விட்டாய்? ராதா!

ராதா: (அவசர அவசரமாய் ஓடிவந்து) என்னம்மா, கூப்பிட்டீர்களா?

வாசவதத்தை: ஏண்டீ, நீயாவது என் பக்கத்தில் சற்று ஆறுதலாய் இருக்கப்படாதா? எங்கடீ தொலைந்து விட்டாய்?

ராதா: ஏனம்மா ஐந்தாறு நாட்களாய் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்? உடம்புக்கு என்னம்மா செய்கிறது?

வாசவதத்தை: ஐயோ! என் மார்பு ஏன் இப்படி விம்முகிறது? வெடித்துவிடும்போல் தோன்றுகிறதே!

ராதா: வைத்தியரைக் கூட்டிக்கொண்டு வரட்டுமா, அம்மா?

**வாசவதத்தை:** இந்த வியாதிக்கு வைத்தியர் வந்து என்னடி செய்யப் போகிறார்?

**ராதா:** உங்களுக்கு என்னம்மா வியாதி?

**வாசவதத்தை:** பெண்களின் விரக வேதனை எப்படி இருக்குமென்பது எனக்கு இப்பொழுதுதான் தெரிகிறதடீ!

**ராதா:** ஓஹோ!

**வாசவதத்தை:** (உணர்ச்சி பொங்க) வாசவதத்தை பிறர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டாள் என்பதைக் கேள்விப்பட்டிருப்பாய். ஆனால் வாசவதத்தையின் உள்ளத்தை ஒருவர் கொள்ளை கொண்டார் என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறாயா, ராதா?

**ராதா:** (உணர்ச்சி அற்றவள்போல்) ஓ! அப்படியா விஷயம்!

**வாசவதத்தை:** (மிகுந்த வேதனையுடன்) அவரைப் பார்த்த க்ஷணத்திலிருந்து என் உள்ளம் அவரையே நாடுகின்றதடி!

**ராதா:** ஊஹூம்!

**வாசவதத்தை:** அவருடைய முகத்தில்தான் என்ன அழகு, என்ன பொலிவு! அவருடைய வதனத்தில் பால் வடிந்ததே, பார்க்கவில்லையாடீ, சகி!

**ராதா:** ஆமாம்! வடிந்தது! வடிந்தது!

**வாசவதத்தை:** அவருடைய முகத்தில்தான் எத்தனை அமைதி! எத்தகைய சாந்தம்!

**ராதா:** உம், அப்புறம்?

**வாசவதத்தை:** என்னுடைய வீட்டிற்கு எத்தனையோ பிரபுக்களும், அரசர்களும் வருகிறார்களே, அவர்களைப் போல் அவர் பட்டாடையா அணிந்திருந்தார்? இல்லை. வாசனைத் தைலம் பூசியிருந்தாரா? இல்லை. அலங்காரம் செய்திருந்தாரா?

**ராதா:** (புன் சிரிப்புடன்) இல்லை!

**வாசவதத்தை:** (அதைக் கவனியாமல்) வாகனாதிகளில் வந்தாரா? அதுவுமில்லையே! பின் எப்படியடி, அவர் என் உள்ளத்தைக் கவர்ந்தார்?

**ராதா:** கொஞ்சம் பொறுங்களம்மா. என்னுடைய உள்ளம் என்னிடம் இருக்கிறதா, அதையுங் கவர்ந்து சென்றுவிட்டாரா என்று பார்த்துக் கொள்ளுகிறேன்!

**வாசவதத்தை:** ராதா, என்னுடைய நிலைமையை நீ உணரவில்லை.

**ராதா:** உம்!

**வாசவதத்தை:** நீ என்ன நினைத்தாலுஞ் சரி; நான் அவரிடம் காதல் கொண்டுவிட்டேன். (பெருமூச்சுடன்) காதல் என்னவென்பது எனக்கு இப்பொழுதுதான் விளங்குகிறது ராதா!

**ராதா:** (புன்சிரிப்புக் கலந்த உபதேசம் செய்யும் தோரணையில்), காதலாவது, கழுதைக்குட்டியாவது! நமக்கு ஏதம்மா காதல்? பெண்ணும், விரகமாம்,

வேதனையாம், வதனமாம், பாலாம், வடிகிற தாம்! என்னம்மா பிதற்றுகிறீர்கள்? எவனொருவனிடம் பணம் இருக்கிறதோ, அவனிடம் பணமிருக்கும்வரை அத்யந்தக் காதல் கொண்டிருப்பதாகப் பாசாங்கு செய்து பணம் பறிக்க வேண்டியது; பின்பு அவனுடைய மூஞ்சியில் எச்சிலைக் காறி உமிழ்ந்து, காலால் மிதித்துத் தள்ள வேண்டியது! காதலுக்கும் நம்ம தொழிலுக்குங் கட்டிவருமா அம்மா!

**வாசவதத்தை :** அடி ராதா, என்னைக் கேலியா பண்ணுகிறாய்?

**ராதா :** முன்னொரு சமயம் நான் இப்படி வேதனைப்பட்டபோது, என்னை எந்தவிதம் ஏளனம் செய்தீர்கள்?

**வாசவதத்தை :** அதற்கு இப்பொழுது பழிக்குப் பழியா வாங்க விரும்புகிறாய்?

**ராதா :** பழி வாங்குவது என் இஷ்டமல்ல; ஆனால் 'தலைவலியுங் காய்ச்சலுந் தனக்கு வந்தால்தான் தெரியும்' என்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். காதலும் அதுபோலத்தான்!

**வாசவதத்தை :** அடி ராதா, எனக்கும் வந்துவிட்டதே! இவ்வளவு போதாதா? இன்னுமா வரவேண்டும்? ராதா, எனக்கு உதவி செய்ய மாட்டாயா?

**ராதா :** (கம்பீரத்துடன்) அம்மா, இதெல்லாம் உள்ளமும், உள்ளமும் சம்பந்தப்பட்ட விஷயம். இதில் மூன்றாமவர் எப்படி உதவி செய்ய முடியும்?

பிறருடைய உதவியை இதில் நாடுவது அறி வீனம்!

**வாசவதத்தை:** அடி அம்மா, நான் சொன்னதெல்லாம் தப்பிதம்! கன்னத்தில் போட்டுக் கொள் ளட்டுமா? என்னை ஏண்டி இப்படிக் குத்திக் குத்திக் காட்டுகிறாய்?

**ராதா:** நான் என்ன கேட்டேன்? அந்த ரத்தின சிம்ம ரிடம் ஒரு வார்த்தைதானே சொல்லச் சொன் னேன். அதற்கு நீங்கள் என்ன சொன்னீர்கள்? நீங்கள் ஒரு வார்த்தை சொன்னால் அவன் தட்டி விடுவானா? யானைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும் அம்மா!

**வாசவதத்தை:** வந்து விட்டதே! இனியுமா வரவேண்டும்? ஐயோ! பிச்சை வாங்க வந்த பிக்ஷு, பிச்சையா வாங்கிக்கொண்டு சென்றார்? என்னுடைய உள்ளத்தையல்லவா பறித்துக் கொண்டுசென்று விட்டார்!

**ராதா:** எந்தப் பிக்ஷுவம்மா?

**வாசவதத்தை:** அவர் தான், நான்கைந்து நாட்களுக்கு முன்னால் வந்தாரே **உபகுப்தர்,** அவர்தான்.

**ராதா:** என்ன! யார்?

**வாசவதத்தை:** அவரைப்போன்ற அழகிய புருஷர் வேறு யாரையாவது நீ பார்த்திருக்கிறாயா, ராதா?

**ராதா :** (தலையிலடித்துக் கொண்டு) தலைவிதி! எத்தனை அரசர்களும் பிரபுக்களும் உங்களுடைய ஒரு கடைக்கண் ஞோக்கிற்காக நமது மாளிகையின் முற்றத்தில் காத்திருக்கிறார்கள்? நீங்கள் போயும், போயும் ஒரு பௌத்த பிக்ஷுவின் மீதா காதல் கொள்ள வேண்டும்?

**வாசவதத்தை :** அவ் வரசர்களும், பிரபுக்களும் உபகுப்தருடைய காலடித் தூசுக்கு ஒப்பாவார்களா, ராதா?

**ராதா :** அம்மா, எனக்கொரு பழமொழி ஞாபகம் வருகிறது; சொல்லட்டுமா?

**வாசவதத்தை :** என்ன?

**ராதா :** கோபித்துக் கொள்ளக்கூடாது.

**வாசவதத்தை :** (மௌனம்)

**ராதா :** (புன்சிரிப்புடன்) வண்ணானுக்கு வண்ணாத்தி மேல் ஆசை; வண்ணாத்திக்கு ........?

**வாசவதத்தை :** (கோபத்துடன்) சீ! கழுதை! என்னடி வேடிக்கை, சந்தர்ப்பம் அறியாமல்.

**ராதா :** சரி, இப்பொழுது என்னை என்னம்மா செய்யச் சொல்கிறீர்கள்?

**வாசவதத்தை :** அப்படிக் கேளடி தோழி! இப்பொழுது தான் நீ என் பிராண சகியானாய்! உபகுப்தரிடம் போய், நான் அவரிடங் கொண்ட காதலை அவருக்கு ரகசியமாய்த் தெரியப்படுத்தி, அவரை

எப்படியாவது நம்முடைய மாளிகைக்கு அழைத்து வரவேண்டும். அவ்வளவுதான்.

**ராதா :** ஆம், அவ்வளவுதான்! புத்தபகவானுடைய சிஷ்யர்களில் ஒருவரும், ராஜரிஷியான அசோகரின் குருவுமான உபகுப்தரை, முற்றத்துறந்த முனிவரைத் தாசி வாசவதத்தை வீட்டிற்குக் கூட்டி வரவேண்டும். அவ்வளவுதானே! வெகு சுலபம்!

**வாசவதத்தை :** கஷ்டமான வேலைதாண்டீ! அதற்காகத் தானே உன்னை அனுப்புகிறேன். வாசவதத்தையின் மையலில் மயங்காத மானிடருமுண்டா? அதையும் ஞாபகம் வைத்துக்கொள்?

**ராதா :** கைமாறு?

**வாசவதத்தை :** (புன்சிரிப்புடன்) ரத்ன சிங்கிடம் உன்னை...

**ராதா :** (அவளுடைய வாயைப் பொத்தி) போதும்! அதற்கு மேல் சொல்ல வேண்டாம்!

# இரண்டாம் காட்சி

[அந்தி நேரம். வாசவதத்தையின் மாளிகையில் ஓர் அறை. வாசவதத்தையின் மனம் சஞ்சலமுற்றிருப்பது போல் அவளுடைய உடலும் அவதிப்படுகிறது. சிறிது நேரம் படுக்கிறாள்; சிறிது நேரம் உட்காருகிறாள்; சிறிது நேரம் நடக்கிறாள்; எதையும் தொடர்ந்து செய்து கொண்டிருக்க அவளுக்குச் சக்தியில்லை. அறையிலுள்ள சாமான்களெல்லாம் நிலை குலைந்திருப்பன போல் தோன்றுகின்றன. இங்கிருப்பதை அங்கும், அங்கிருப்பதை இங்குமாக எடுத்துவைக்கிறாள். அதிலும் திருப்தியில்லை. பின்பு குறுக்கும் நெடுக்குமாக அறைக்குள்ளேயே நடந்து கொண்டிருக்கிறாள். அடிக்கடி தனக்குள் 'ராதாவை இன்னும் காணோமே!' என்று முணுமுணுத்துக்கொள்கிறாள். அச்சமயம் ராதா பரபரப்புடன் அறைக்குள் நுழைகிறாள்.]

**ராதா :** அம்மா! அம்மா! வலி பொறுக்க முடியவில்லையே! உடம்பெல்லாம் வலிக்கிறதே! ஐயோ, என்ன செய்வேன்!

**வாசவதத்தை :** (மிகுந்த கலவரத்துடன்) ராதா! ராதா! உனக்கென்னம்மா! என்னடி செய்கிறது!

(தன் மெத்தையில் படுக்க வைக்கிறாள்.)

**ராதா :** ஐயோ! ஐயோ! உடம்பெல்லாம் குத்துகிறதே!

**வாசவதத்தை :** ஏனம்மா குத்துகிறது? என்னடி நடந்தது? போகும்போது உனக்கு ஒன்றுமில்லையடி!

**ராதா :** இப்படி வருமென்று நான் நினைக்கவில்லையே! ஐயோ! அம்மா! இப்படி ஆகுமென்று நினைத்தால், நான் போயிருக்க மாட்டேனே.

**வாசவதத்தை :** ஐயோ! என்ன நடந்தது சொல்லேன்? கண்ணே, ராதா!

**ராதா :** ஐயோ! ஐயோ! பொறுக்க முடியவில்லையே!

**வாசவதத்தை :** நடந்ததைச் சொல்லடி. ஐயோ! என் மனம் பதைக்குதே! உபகுப்தர் ஏதாவது சாபமிட்டு விட்டாரா? சொல்லேன்.

**ராதா :** ஆ! ஆ! ஊ! ஊ!

**வாசவதத்தை :** உனக்கு உடம்பைப் பிடித்து விடட்டுமா, ராதா? (பிடித்து விடுகிருள்.)

**ராதா :** ஐயோ! ஐயோ! வெப்புத் தாங்க முடியவில்லையே!

**வாசவதத்தை :** ஐயோ! இது உபகுப்தருடைய சாபந்தாண்டி! உனக்கு வெப்பு நோய் வந்து விட்டதே! என்னடி செய்வேன்? (பக்கத்திலிருந்த பன்னீரை எடுத்து அவளுடைய உடம்பெல்லாம் தெளிக்கிருள். சந்தனத்தை நெற்றியிலும் மார்பிலும் அப்புகிருள்.)

**ராதா :** (உபத்திரவம் சற்று நீங்கியவள்போல்) பன்னீர்தெளியுங்கள்! இன்னும் தெளியுங்கள்! சந்தனத்தைப் பூசுங்கள்!

(வாசவதத்தை மேலும் பன்னீரை ஊற்றுகிருள். சந்தனத்தைப் பூசுகிருள்.)

**ராதா :** இம்மாதிரி இடங்களுக்கெல்லாம் இனி என்னை அனுப்பாதிர்க ளம்மா. உங்களுக்குப் புண்ணியமாய்ப் போகிறது!

**வாசவதத்தை :** நடந்ததைச் சொல், ராதா! இனி அனுப்பவில்லை.

**ராதா :** (புன் சிரிப்புடன்) ஒரு பிக்ஷுவினுடைய கண்ணம்பு பட்டே, நீங்கள் இந்தப் பாடு படு கிறீர்கள்! அத்தனை பிக்ஷுகளும் சேர்ந்து என் மீது கண்ணம்புகள் எய்தால் என்றால் பொறுக்க முடியுமா, அம்மா? (கலகல வென்று சிரிக்கிருள்.)

**வாசவதத்தை :** அடி, நீ நாசமாய்ப்போக! என்னமோ, ஏதோ என்றெல்லவோ நான் பயந்துவிட்டேன். உனக்காக ஒரு செம்பு பன்னீரையும், வாசனைச் சந்தனத்தையும் பாழாக்கினேனே!

**ராதா :** உங்களுடைய பன்னீரும் சந்தனமுந்தான் உங்களுக்குப் பெரிது! நான் எத்தனை கஷ்டப் பட்டு வந்திருக்கிறேன். அதைப்பற்றி உங் களுக்கென்ன கவலை?

**வாசவதத்தை :** அடி ராதா, போன காரியம் என்னடி, சொல்லடி ராதா! ராதா! (அவளுடைய நாடியைப் பிடித்துக் கெஞ்சுகிருள்.)

**ராதா :** அம்மா, எனக்கொரு யோசனை தோன்று கிறது!

**வாசவதத்தை :** (மௌனம்.)

**ராதா :** நீங்கள் தான் உபகுப்தராம், நான் ராதை யாம்.........

**வாசவதத்தை :** இந்த நாடகமெல்லாம் எதற்கடி? உபகுப்தர் சம்மதித்தாரா? சீக்கிரம் சொல்லடி!

**ராதா :** அப்படியானல் நான் சொல்ல மாட்டேன், போங்கள் !

**வாசவதத்தை :** சரி, சரி, அப்படியே வைத்துக் கொள் வோம், சொல்.

**ராதா :** சுவாமி! என் எஜமானி, வாசவத்தை தங்களை அழைத்து வரச்சொன்னார்கள்.

**வாசவதத்தை :** (காதுகளைப் பொத்திக்கொண்டு) ஆ! என்ன ! வாசதத்தையா! தாசி வாசவதத்தையா! ஐயோ ! இங்கே நில்லாதே! போ ! போ !

(ராதையைத் துரத்துகிருள்.)

**ராதா :** அம்மா! அம்மா ! உபகுப்தர் வேஷம் போட்ட வுடனேயே உங்களுக்கு இவ்வளவு வைராக்கியம் வந்து விட்டதே? உண்மையான உபகுப்தர் எவ்வளவு வைராக்கியசாலியா யிருக்க மாட் டார்?

**வாசவதத்தை :** உன் வேலை கஷ்டந்தானம்மா, நான் இல்லையென்று சொன்னலல்லவா இந்த சாகச மெல்லாம் நீ செய்ய வேண்டும்? சொல்லடி ராதா! உபகுப்தர் வருவாரா ?

**ராதா :** திடீரென்று சொல்லிவிட்டால் உங்களால் துக்கம் பொறுக்க முடியாதே என்றுதான் நினைத்தேன். ஒரு வரியில் சொல்லவேண்டு மனல், நீங்கள் உபகுப்தர் மீது கொண்ட ஆசையை மறந்துவிடுவதே நலம்.

**வாசவதத்தை :** அடி ராதா, என்னடி சொல்லுகிருய் நீ! நீலோற்பலம் போன்ற என் கருவிழிகளின்

பார்வையும், பவளச் செவ்வாயில் இலேசாக எட்டிப் பார்க்கும் முல்லை அரும்புகள் போன்ற என் பற்களின் இளநகையும் அவரை மயக்கத் தவறிவிட்டன என்று சொல்கிறாய்?

**ராதா :** அம்மா, ஆசையெல்லாம் வெறுத்த அருந்தவ முனிவரல்லவா, அவர்!

**வாசவதத்தை :** முனிவர்! முனிவராம்! நடுக்கடலில் பெருமழை பெய்வதுபோல, முனிவருக்கு ஏன் இத்தனை அழகையும் கொடுத்தான் ஈசன்?

**ராதா :** உங்களைப்போன்ற நாரீமணிகள் அனுபவிக்க வேண்டுமென்றுதான்!

**வாசவதத்தை :** (ஆத்திரத்துடனும், பரபரப்புடனும்) அடி ராதா, என்னை ஏண்டி இப்படித் துன்புறுத்துகிறாய்? அவர் என்னடி சொன்னார்? ராதா! ராதா! தெளிவாய்ச் சொல்லமாட்டாயா?

**ராதா :** வருவதாகச் சொன்னார்!

**வாசவதத்தை :** வருவதாகச் சொன்னாரா? உபகுப்தரா?

**ராதா :** ஆமாம், சாக்ஷாத் உபகுப்தரே வருகிறதாகச் சொன்னார்.

**வாசவதத்தை :** அடி ராதா! உனக்கு என்ன கைமாறு செய்யப்போகிறேனடி, கண்ணே (வைரங்கள் பதித்த ஒரு மாங்காய் மாலையைக் கழற்றி அவள் கழுத்தில் போடுகிறாள்.) எப்பொழுது வருவார்? இன்றிரவே வருவாரா?

**ராதா :** அவசரப்படாதீர்களம்மா..........வருவார்!

**வாசவதத்தை :** இன்றிரவா ?

**ராதா :** (சற்று நேரம் மௌனமாயிருந்து) உம், வருவார்.

**வாசவதத்தை :** அடி சகி! ஒரு விஷயம் சொல்லட்டுமா? **(வாசவதத்தையை, ராதை ஏறிட்டு நோக்குகிறுள்.)**

**வாசவதத்தை :** மாதர் வலையில் சிக்காத மாமுனிவன் எவனும் இம் மகிதலத்தில் இல்லை !

**ராதா :** உம் !

**வாசவதத்தை :** ( சந்தோஷம் மிகுதியினுல் ஆர்ப்பரித்து ) வாசவதத்தையின் அழகுக்கு மயங்காதார் வானுலகத்திலுமில்லை. பூவுலகத்தைப்பற்றிக் கேட்கவா வேண்டும்? **(குதித்துக்கொண்டு வெளியேறுகிறுள்.)**

**ராதா :** அம்மா ரத்னசிங் ?

**வாசவதத்தை :** (வெளியேறும் பொழுதே) இதில் பிறர் சொல்வதில் எல்லாம் என்னடி இருக்கிறது, ராதா ? அவரவர் அழகினுலல்லவா, ஆடவரை வசீகரிக்க வேண்டும் !

**ராதா :** ஓஹோ !

# மூன்றும் காட்சி

[இரவு நேரம், வாசவதத்தையின் மாளிகை. வாசவதத்தை ஓர் அறையில் உட்கார்ந்திருக்கிருள்.]

**வாசவதத்தை:** (கூப்பிடுகிருள்) ஹீரா!

**ஹீரா:** (ஓடிவந்து) படுக்கையை அலங்கரித்து விட்டேன் அம்மா.

**வாசவதத்தை:** எப்படி அலங்கரித்தாய்? சொல் பார்க்கலாம்.

**ஹீரா:** நான் சொல்வதைவிட, நீங்களே வந்து பார்த்துவிட்டால் நன்ருயிருக்கும், அம்மா ஏதாவது குற்றங்குறை இருந்தாலும் திருத்திவிடலாம்.

**வாசவதத்தை:** எனக்கு இப்பொழுது அங்கு வருவதற்கு நேரமில்லை. நீ சொல்; ஏதாவது குறையிருக்கிறதா என்று பார்க்கலாம்.

**ஹீரா:** புதிதாகத் தைத்து வந்திருந்த மிருதுவான அழகிய இரண்டு பட்டு மெத்தைகளை முதலாவது கட்டிலில் விரித்தேன். அவைகளின் மீது அழகிய பூவேலைகள் செய்த, பட்டினுலாகிய விரிப் பொன்றை விரித்து, இரண்டு தலையணைகளைப் போட்டேன். பின்னர் நீலமேக சாமள வர்ணத்தினுலாகிய பட்டு விதானம் ஒன்றைக் கட்டிலுக்கு மேலே கட்டினேன். ஆகாயத்தில் மேகங்களுக்கிடையில் சந்திரனும், நக்ஷத்திரங்களும் எங்ஙனம் பிரகாசித்துக் கொண்டிருக்

கின்றனவோ, அதேபோல் அவ் விதானத்தில் சித்திரம் தீட்டப்பட்டிருக்கிறது. பின்பு நாலா புறங்களிலும் பலவிதமான சித்திரங்கள் எழுதப் பட்ட அழகிய படுதாக்களைத் தொங்கவிட்டேன். முன்னால் தொங்கிக் கொண்டிருக்கும் படுதாவை அழகாய் மடித்துக் கட்டி, முத்துச் சரங்களைத் தொங்கவிட்டிருக்கிறேன். படுக்கையினுள் மேலே நான்கு மூலைகளிலும் மரகதத்தினால் இழைக்கப்பட்ட கிளிகளைத் தொங்க விட்டு அலங்கரித்திருக்கிறேன். அம்மா, நான் அங்கு செய்திருக்கும் அத்தனை அலங்காரங்களையும் எப்படியம்மா நாவினால் வர்ணிக்க முடியும்? நீங்களே வந்து பார்த்து விட்டால்.........

**வாசவதத்தை :** அதெல்லாம் சரிதான். எல்லாம் நீ நன்றாய்த்தான் செய்திருப்பாய். படுக்கையின் சமீபத்தில் பன்னீர், கலவைச் சந்தனம், ஜவ்வாது இதர வாசனைத் திரவியங்கள் எல்லாம் வைத்திருக்கிறாயா?

**ஹீரா :** ஆம், அம்மா.

**வாசவதத்தை :** பிட்டாய் வகைகளெல்லாம் தயார் செய்து வைக்கும்படி உன்னிடந்தானே சொன்னேன்?

**ஹீரா :** ஆம், அம்மா; அவைகளை இப்பொழுதே அங்கு கொண்டு போய் வைத்துவிடவா?

**வாசவதத்தை :** வேண்டாம். இப்பொழுதே வைத்தால் ஆறிவிடும். அந்தச் சமயத்தில் கொண்டுவந்தால் போதும்.

**ஹீரா :** சரி, அம்மா, அப்படியே செய்கிறேன்.

**வாசவதத்தை :** ஒன்று கேட்க மறந்து விட்டேனே. படுக்கையின்மீது ரோஜா இதழ்கள் பரப்பினுயா?

**ஹீரா :** ரோஜாப்பூ இப்பொழுது இல்லையே அம்மா.

**வாசவதத்தை :** இல்லையானால் வேலைக்காரியை அனுப்பி சீக்கிரமாய் வாங்கிக்கொண்டு வரச்சொல். ஓடு! அப்படியே ராதையை இங்கே வரச்சொல்.

**ஹீரா :** அவள் ஏனோ இன்று ஒரு வேலையிலும் மனங் கொள்ளாமல் இருக்கிருள், அம்மா.

**வாசவதத்தை :** சரி, நீ அவளை வரச்சொல்.

(ராதை கடுகடுத்த முகத்துடன் வருகிருள்)

**வாசவதத்தை :** ஏண்டி ராதா, ஒரு மாதிரி இருக்கிருய்?

**ராதா :** ஒன்றுமில்லை.

**வாசவதத்தை :** நான் வேடிக்கையாகப் பேசினதை நினைத்துக்கொண்டா இப்படி இருக்கிருய்? ரத்ன சிங்கிடம் அவசியமாய் உன்னைப் பற்றிச் சொல்கிறேன். அவர் வரும்பொழுது நீ இப்படி முகத்தை வைத்துக்கொண்டிருந்தால் நன்ருயிருக்குமா? போய்த் தலையை வாரிக்கொண்டு சீக்கிரம் வா. மாயாவை உடனே இங்கே அனுப்பு. எனக்கு அலங்காரங்கள் செய்ய வேண்டும். அவள்தான் நன்ருய்ச் செய்வாள்.

(மாயா வந்து வாசவதத்தையை அலங்கரிக்கிருள் சிறிது நேரத்தில் ராதை வருகிருள்.)

**வாசவதத்தை :** ராதா வந்துவிட்டாயா? வீடு முழுதும் நீ ஒரு தடவை சுற்றிச் சென்று, எல்லா ஏற்

பாடுகளும் பூர்த்தியாகிவிட்டனவா என்று பார்த்துவிட்டு வா. எல்லாம் நன்றாய்ப் பார்க்க வேண்டும். அவருடைய மனம் நோகும்படி ஒரு குறையும் இருக்கக்கூடாது.

(சிறிது நேரங்கழித்து ராதை வருகிறாள்.)

**ராதா:** வாசலுக்கு நேராக புத்த பகவானுடைய சித்திரம் ஒன்று மாட்டப்பட்டிருக்கிறதே அது............

**வாசவதத்தை:** அடி ராதா, இதற்காகத்தானே உன்னைப் போகச் சொன்னேன். நல்லவேளையாக ஞாபகப் படுத்தினாய். வாசலில் நுழைந்தவுடன் அச் சித்திரத்தைக் கண்டு, மீண்டும் வைராக்கியம் கொண்டு உபகுப்தர் திரும்பிவிட்டால் என் செய்வது? அதை உடனே அகற்றிவிடு.

(ராதை அச்சித்திரத்துடன் திரும்பி வருகிறாள்.)

**வாசவதத்தை:** அடி ராதா, அவர் எப்பொழுது வருவார்? இன்னுங் காணோமே!

**ராதா:** ஆத்திரப் படாதீர்கள் அம்மா, வந்துவிடுவார்.

**வாசவதத்தை:** அடி ராதா, என்னைப் பார்த்துச் சொல். நான் நன்று யிருக்கிறேனா? உபகுப்தர் என் அழகில் மயங்குவாரா?

**ராதா:** உங்கள் அழகில் மயங்காமலா வருகிறேன் என்று சொன்னார்?

**வாசவதத்தை:** அவர்மீது நான் உண்மையான காதல் கொண்டிருக்கிறேன் என்பதைக் காட்ட, அவர் வந்தவுடன் நான் என்னடி செய்யவேண்டும்?

எனக்கு இத்தனை அனுபவமிருந்தும் இந்த விஷயத்தில் ஒன்றுந் தெரியாதது போலவே தோன்றுகிறதடீ.

**ராதா:** அதைப்பற்றிப் பயப்படவேண்டாம். அதெல்லாம் இயற்கையாகவே உங்களுக்குத் தெரிந்து விடும்.

(மாயா வருகிருள்.)

**மாயா:** யாரோ வந்திருக்கிருர், அம்மா.

**ராதா:** அவர் வந்துவிட்டார் போலும். ராதா நீ போய் அவரை அழைத்து வா. (அவளுடைய மார்பு துடிக்கிறது.)

**ராதா:** (திரும்பிவந்து) அம்மா, பாடலிபுத்திரத்துப் பிரபலப் பட்டு வியாபாரி கிருஷ்ணதத்தர் வந்திருக்கிருர்.

**வாசவதத்தை:** ஐயோ! இந்தச் சனியன்களை யெல்லாம் யார் இன்றைக்கு வரச் சொன்னது? ஏதாவது சாக்குச்சொல்லி அனுப்பிவிடு. உடம்புக்குச் சௌகரியமில்லை என்று சொல்.

**ராதா:** (தனிகரை அனுப்பிவிட்டுத் திரும்பிவந்து) அம்மா, இன்றைக்கு அவர் கட்டாயம் வருவாரென்று தான் எனக்குத் தோன்றுகிறது.

**வாசவதத்தை:** வாசற் கதவு திறந்திருக்கிறதா?

**ராதா:** திறந்துதான் வைக்கப்பட்டிருக்கிறது.

**வாசவதத்தை:** எதற்காகக் கேட்கிறேனென்றால் இந்த பௌத்த பிக்ஷுக்களெல்லாம் வைராக்கியம்

மிக்கவர்கள். ஏதாவது சிறிய தடை ஏற்பட்டாலும் திரும்பிச் சென்றுவிடுவார்கள்.

(சிறிது நேரம் இருவரும் மௌனம்)

**வாசவதத்தை:** ராதா, எனக்கொரு யோசனை தோன்றுகிறது. அவர் பின்புற வாசல் வழியாக ஒரு வேளை வருவாரோ?

**ராதா:** ஆமாம் அம்மா, வந்தாலும் வரலாம்.

**வாசவதத்தை:** நீ உடனே ஓடிப்போய் பின்புற வாசலைத் திறந்து, அங்கே ஹீராவைக் காவல் வைத்து விட்டு வா.

(சிறிது நேரத்தில் ராதை திரும்புகிருள். இதற்குள் மாயா ஓடிவருகிருள்.)

**மாயா:** அம்மா! இளவரசர் வந்திருக்கிருர்.

**வாசவதத்தை:** ஐயோ! என் தலைவிதி! யார் யாரோ வருகிருர்கள்; அந்தப் பிக்ஷுவை இன்னுங் காணுமே! இளவரசரை எப்படிப் போகச் சொல்வது? இந்தச் சமயம் உபகுப்தர் வந்தால் என் செய்வது? ராதா, என்னடி செய்யலாம்?

**ராதா:** அம்மா நான் வெளியிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன். உபகுப்தர் வந்தால் சமிக்ஞையால் தெரிவிக்கிறேன். இளவரசரை எப்படியாவது அனுப்பிவிடுங்கள்.

**வாசவதத்தை:** ஆமாம், அதுதான் வழி. அரசர் வந்திருக்கிருர் என்று சொல்லலாம். சரி, அப்படியே செய்.

(விடிய ஏழெட்டு நாழிகை யிருக்கும்போது இள வரசர் வாசவதத்தையின் வீட்டைவிட்டு வெளியேறு கிறார். வாசவதத்தை, ராதையை அழைக்கிறாள்.)

என்னடி ராதா?

**ராதை:** அவர் வரவில்லை!

**வாசவதத்தை:** வரவில்லையா! ஐயோ, எப்பொழுது வருவாரோ!

(மிகுந்த ஏமாற்றத்துடன் படுக்கையில் சாய்கிறாள்.)

# இரண்டாம் அங்கம்

[நகரத்திற்கு வெளியில் ஓர் அழகிய தோப்பின் மத்தியில் பௌத்த பிக்ஷுக்கள் தங்கும் பௌத்த விகாரம் ஒன்று. அதில் ஓர் அறையில் உபகுப்தர் ஆசனத் தமர்ந்திருக்கிறார். அவருக்கு முன்னால் ராதை வணங்கி நிற்கிறாள்.]

**உபகுப்தர்:** ஏதாவது விசேஷமுண்டா?

**ராதா:** தங்களைத்தான் அடியாள் தேடிவந்தேன்.

**உபகுப்தர்:** (மௌனம்)

**ராதா:** (அவரையே சற்றுநேரம் கண்ணிமையாது பார்த்துக் கொண்டிருந்துவிட்டுத் தனக்குள்) இத்தகைய சுந்தர புருஷர் வாசவதத்தையின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

**உபகுப்தர்:** விசேஷ முண்டானால் சொல்.

**ராதா:** நேற்றிரவு முழுதும் என் எஜமானி தங்களுடைய வருகைக்காகக் காத்திருந்தாள்.

**உபகுப்தர்:** ஓஹோ!

**ராதா:** தாங்கள் வராததைக் கண்டு மிகுந்த ஏமாற்ற மடைந்தாள். அவளுடைய வதனம் வாடி விட்டது! உடல் மெலிந்து விட்டது! அழகு நலிகிறது!

**உபகுப்தர்:** அப்படியா? எனது வரவை அவ்வளவு தூரம் விரும்புகிறாளா?

**ராதா:** ஐயோ! அதை எப்படி நான் உங்களுக்கு விளங்க வைப்பேன்?

**உபகுப்தர்:** என்னை வரவேற்க அவள் தயாரா யிருந்தாளா?

**ராதா:** ஆமாம், தன்னை நன்கு அலங்கரித்துக் கொண்டிருந்தாள்.

**உபகுப்தர்:** அப்புறம்?

**ராதா:** வீடு முழுதும் நன்றாய்ச் சுத்தம் செய்யப் பட்டு அழகாய் ஜோடிக்கப் பட்டிருந்தது.

**உபகுப்தர்;** உம்.........

**ராதா:** நீங்கள் எந்த க்ஷணமும் வரலாமென்று நினைத்து வாசற் கதவு இரவு முழுதும் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

**உபகுப்தர்:** வாசற்கதவு மட்டுந்தானா?

**ராதா:** (ஒரு குறும்பு நகைப்புடன்) தங்கள் உள்ளக் கிடக்கை எனக்கு நன்கு விளங்குகின்றது! நீங்கள் ஒரு வேளை பின்வாசல் வழியாக வருவீர்களென்று நினைத்துப் பின்புற வாசலையுந் திறந்தே வைத்திருந்தோம்.

**உபகுப்தர்:** (புன்முறுவலுடன்) வேறு எக்கதவுந் திறக்கப்பட வில்லையா?

**ராதா;** (திகைக்கிறள்.)

**உபகுப்தர்:** விளக்கு ஏற்றப்பட்டிருந்ததா?

**ராதா:** ஆமாம். அநேக தீபங்களும், தீவர்த்திகளும் ஏற்றப்பட்டு, மாளிகை ஜெகஜ்ஜோதியாய் விளங்கிற்று!

**உபகுப்தர்:** ஓ, அப்படியா? நான் வந்து பார்த்தபோது வீடு தாளிடப்பட்டிருந்தது!

**ராதா:** தாளிடப்பட்டிருந்ததா? வாசவதத்தையின் வீடா?

**உபகுப்தர்:** ஆம், வாசவதத்தையின் வீடுதான்! ஒரு தாள் மட்டுமல்ல. நான் எவ்வகையிலும் உட்புகாதவாறு அநேக தாள்கள் இடப்பட்டிருந்தன.

(ராதா ஆச்சரியத்துடன் விழிக்கிருள்.)

**உபகுப்தர்:** வீடு முழுதும் இருள்மயமா யிருந்தது!

(ராதை மேலும் ஆச்சரியத்துடன் பார்க்கிருள்.)

**உபகுப்தர்:** ஆமாம், ஒரே இருள் மயமா யிருந்தது! வாசவதத்தை நன்கு அலங்கரித் திருந்தாள் என்று சொன்னுயே; ஆனுல் அவ்விருளில் அவள் மிகக் குரூபியாகத் தோன்றினுள்!

**ராதா:** யார்? வாசவதத்தையா? என் எஜமானியா?

**உபகுப்தர்:** ஆம். வாசவதத்தைதான். அவள் இயற்கையில் மிக அழகு வாய்ந்தவளே. ஆனுல் அப்பொழுது மிகக் குரூபியாகத் தோற்றமளித்தாள்!

**ராதா:** அப்படியானுல் நான் சென்றுவருகிறேன்.

(வணங்குகிருள்.)

உபகுப்தர்: வாசவதத்தையை அடையவேண்டுமென்று என் உள்ளம் துடிக்கிற துடிப்பை நான் உனக்கு எங்ஙனம் விளங்க வைப்பேன்!

(ராதா பிரமித்து உபகுப்தரை நோக்குகிறாள்.)

உபகுப்தர்: ஐயோ! என் மனம் என்ன பாடுபடுகிறது! அவளுடைய உள்ளத்தை என்னால் கவர முடியுமா? அவளுடைய அன்பைப் பெறுங் காலம் எக்காலமோ? (பெருமூச்சு விடுகிறார்)

ராதா: என் எஜமானியும் இவ்விதமேதான் ஏங்குகிறாள்!

உபகுப்தர்: ஏங்குகிறாளா, இவ்விதமா?

ராதா: (சரியாய்ப் புரிந்துகொள்ளாமல்) ஆம், தாங்கள் தயவு கூர்ந்து வருவீர்களா?

உபகுப்தர்: ஓ! அவசியம் வருகிறேன்!

ராதா: எப்பொழுது வருகிறீர்கள்?

உபகுப்தர்: வாசவதத்தையிடம் செல்ல வேண்டுமென்று ஒவ்வொரு விநாடியும் என் உள்ளம் துடிக்கிறது!

ராதா: அப்படியானால் அவசியம் இன்று வருவீர்கள்!

உபகுப்தர்: அவள் வீட்டைச் சுத்தி செய்யட்டும்; தீபத்தை ஏற்றட்டும்! கதவைத் திறக்கட்டும்! அவசியம் வருகிறேன்.

ராதா: அப்படியே சொல்கிறேன். கருணை கூர வேண்டும்; சென்றுவருகிறேன்.

(வணங்குகிறாள்)

# மூன்றும் அங்கம்

[பல வருடங்கள் சென்று விட்டன. நகரத்திற்கு வெகு தூரத்திற்கப்பால் இடுகாடாயும், சுடுகாடாயும் உபயோகப்படும் ஓர் பாழ் வெளி. தன்னுடைய துர் வாழ்க்கையினால் குஷ்டநோயுற்று, அங்கங்களெல்லாம் அழுகிக் கேவலமான ஸ்திதியையடைந்த வாசவதத்தை அங்கு கொண்டு வந்து போடப்பட்டிருக்கிறாள். அவளுடைய செல்வமெல்லாம் சென்ற இடந் தெரிய வில்லை. அவளுடைய செல்வாக்கும் அங்ஙனமே. அவளுடைய அழகு? அதைச் சொல்வானேன்! அச் சுடுகாட்டுப் புழுதியில் புரண்டுகொண்டிருக்கிறாள். உடல் வேதனை பொறுக்க மாட்டாமல் அரற்றுகிறாள்.]

**வாசவதத்தை:** ஐயோ! ஐயோ! வேதனை பொறுக்க முடியவில்லையே! ஆ! இப்பாழும் சுடுகாட்டில் கொண்டுவந்து போட்டுவிட்டார்களே! தரை கொதிக்கின்றதே! என் முதுகெல்லாம் கொப்பளித்து விட்டதே! (திரும்பிப் படுக்கிறாள்.) ஐயோ! எந்தப் புறந் திரும்பினாலும், சூடு பொறுக்க முடியவில்லையே! இந்தக் கடைசிக் காலத்தில் படுத்திருக்க ஒரு குடிசை நிழல் கூட இல்லாமல் போய்விட்டதே. ஆ! கடவுளே! நானிருந்த நிலையென்ன? இப்பொழுது படுங் கஷ்டமென்ன? எனக்குக் கை அமுக்குவதற்கு எத்தனை பேர், கால் அமுக்குவதற்கு எத்தனை பேர், நூற்றுக்கணக்கான சேடிகளுடன் நான் இன்பவாழ்வு வாழ்ந்தேனே! ஐயோ, இப்பொழுது என்னை

ஏனென்று கேட்பார் ஒருவருமில்லையே! ஆ! கடவுளே!

(ஒரு கழுகு வந்து அவளுடைய ஸ்தனத்தைக் கொத்தித் தின்கிறது. அதைத் துரத்துவதற்கு வீணில் முயற்சி செய்கிருள். மேலும், மேலும் கொத்தித் தின்கிறது.)

**வாசவதத்தை:** ஏ! ஈசா! என் கதி இப்படியுமா ஆக வேண்டும்? இன்று என்னைச் சுற்றிப் பருந்துகளும், கழுகுகளும் வட்டமிடுகின்றன! என்னே என் விதியிருந்தவாறு! என்னே மாய வாழ்க்கை!

(கழுகு மீண்டும் கொத்துகிறது.)

**வாசவதத்தை:** இதை விரட்டுவதற்காவது ஒருவரும் வரமாட்டார்களா? எனக்கு உதவி செய்வோர் ஒருவருமில்லையா? ஐயோ! இப்படியா நான் அனுதையாய்ச் சாகவேண்டும்? என் சொத்து எங்கே? சுகமெங்கே? வீடெங்கே? வாசலெங்கே? என் அழகெங்கே? என்னைச் சூழ்ந்திருந்த மன்னர்களும், பிரபுக்களுமெங்கே? ஐயோ! ஐயோ! வலி பிராணன் போகிறதே.

(வலி பொறுக்க முடியாமல் துடிக்கிருள்.)

**வாசவதத்தை:** வாழ்க்கை! மாய வாழ்க்கை!

(அச்சமயம் உபகுப்தர் அங்கு வருகிறுர்.)

**உபகுப்தர்:** (அன்பு மிகுந்த குரலில்) வாசவதத்தை! வாசவதத்தை!

**வாசவதத்தை:** ஐயோ! ஆ! ஐயோ!

**உபகுப்தர்:** வாசவதத்தை!

**வாசவதத்தை:** இவ்வளவு அன்பான குரலை நான் கேட்டு வெகு நாட்களாய் விட்டனவே! யார் என்னை இவ்வளவு அன்பாய்க் கூப்பிடுவது ?

**உபகுப்தர்:** வாசவதத்தை, என்னைத் தெரியவில்லையா உனக்கு ?

**வாசவதத்தை:** என் பார்வை எல்லாம் மழுங்கி விட்டது. தாங்கள் யார் என்று தெரிய வில்லையே!

**உபகுப்தர்:** யாருடைய வருகைக்காகப் பல வருடங்கள் காத்திருந்தாயோ, அந்த உபகுப்தனே நான்!

**வாசவதத்தை:** சுவாமி! சுவாமி! உபகுப்தரா! உப குப்தரா! என் காதுகளை நம்ப முடியவில்லையே!

**உபகுப்தர்:** ஆம், அம்மா வாசவதத்தை! உபகுப்தன் தான் வந்திருக்கிறேன்.

**வாசவதத்தை:** அரசர்களும் பிரபுக்களும் என்னுடைய அழகுக்காகப் போட்டி போட்டுக் கொண் டிருந்த காலம் ஒன்றிருந்தது. அக் காலத்தில் எல்லாம் வராமல், நாய்களும், நரிகளும், கழுகு களும், காகங்களும், என் உடலைப் பற்றி இழுத்துக் கடித்துத் தின்னும் இக்காலத்திலா தாங்கள் வர வேண்டும்? இத்தகைய ஸ்திதி யிலா தாங்கள் என்னைப் பார்க்கவேண்டும்? ஐயோ! வல்விதியே!

**உபகுப்தர்:** அவர்கள் வரவேண்டிய காலத்தில் அவர்கள் வந்தார்கள். நான் வரவேண்டிய காலத்தில் நான் வந்திருக்கிறேன். இதில் என்னம்மா ஆச் சரியம்?

**வாசவதத்தை :** உபகுப்தருக்குச் சமீபத்தில் நான் இருக்கிறேன் என்று நினைப்பதற்குக் கூட எனக்கு வெட்கமா யிருக்கிறதே. இப்பொழுது நான் அவ்வளவு குரூபியா யிருக்கிறேனே, சுவாமி!

**உபகுப்தர் :** அழியுந் தன்மைக்கான அழகை இழந்ததற்கு ஏனம்மா வருந்துகிறாய்? அழியாத அழகைப் பெறுவதற்கு முயற்சி செய்.

**வாசவதத்தை :** அழியாத அழகு! — அது உலக இயற்கைக்கே மாறானதல்லவோ சுவாமிகளே!

**உபகுப்தர் :** அழியாத அழகு! மாறாத இளமை! குன்றாத செல்வம்! இவைகளைக் கொடுக்கவல்ல மார்க்கம் ஒன்றிருக்கிறது!

**வாசவதத்தை :** சுவாமி, தாங்கள் என்ன சொல்கிறீர்கள்? நான் மீண்டும் இளமையும், அழகும் பெறலாமென்றா சொல்கிறீர்கள்?

**உபகுப்தர் :** ஆம், முன்னைவிட அதிக இளமையும், அழகும் பெறலாம். அது என்றும் அழியாது!

**வாசவதத்தை :** அதைக் கொடுக்கவல்ல மஹான் யாரோ? அம்மார்க்கம் எது சுவாமி?

**உபகுப்தர் :** அவர்தான் பகவான் புத்தர்! அவருடைய பூத உடல் மறைந்து இன்று அநேக நூற்றாண்டுகள் ஆகின்றன. ஆயினும் அவருடைய அருள், அவருடைய அன்பு, அவருடைய தூய்மை இவ்வுலகம் முழுதையும் ஆட்கொண்டிருக்கிறது!

**வாசவதத்தை:** புத்த பகவான் எங்கே? இப்பதிதை எங்கே? அத் தூய்மையான மார்க்கம் எங்கே? அவருடைய அருளை நான் எங்ஙனம் பெற முடியும், சுவாமி?

**உபகுப்தர்:** பாவிகளுக் கெல்லாம் அபயமளிக்கும் அருட் சாகரம் புத்தர்! ஹிருதய பூர்வமாக நீ விழைந்தால், அவருடைய அருள் உனக்கும் கிடைக்கும். அவருடைய சத் சங்கத்தில் சேர்ந்து விடு. அப்பெருமானைப் பூஜி. அவருடைய போதனைகளைப் பின்பற்று. அதுவே உனக்குச் சாந்தி கொடுக்கும்!

**வாசவதத்தை:** அடியேனை ஆட்கொள்ள வந்த பிரபு! குருநாதா! அப்படியானால் இப் பாவியைப் புத்த பகவானின் சத் சங்கத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பீர்களா, சுவாமி?

**உபகுப்தர்:** அப்படியே!

(மிகுந்த பரிவுடனும் அன்புடனும் **வாசவதத்தையை** தூக்கிக்கொண்டு பாடலிபுத்திரத்திலுள்ள பௌத்த விஹாரத்தை நோக்கிச் செல்கிறார்.)

[ திரை ]

# பாரியின் பறி

## பாத்திரங்கள்

*பாரி* : பறம்பு மலை அதிபதி கடையேழு வள்ளல்களில் ஒருவன்.

*ஔவையார்* : நல்லிசைப் புலமை மெல்லியலாள்.

*கபிலர்* : ஒரு நல்லிசைப் புலவர்.

சேவகர்கள், கள்வர்கள்.

# முதற் காட்சி

*[பறம்புமலை அதிபதியும் கடையேழு வள்ளல்களில் ஒருவனுமான* **பாரி** *கொலு வீற்றிருக்கிறான். நல்லிசைப் புலமை மெல்லியளாகிய* **ஔவையார்** *மண்டபத்திற்குள் நுழைகிறார்.]*

**ஔவையார்:** பறம்பு மலை வேளே! இன்று போகலாம்—நாளைப் போகலாம் என இதுகாறும் நாட்களைக் கடத்திக்கொண்டு வந்து விட்டீர். உம்முடைய பேரன்பை உணர்கிறேன். இனி என்னால் ஒரு கணமும் தாமதிக்க முடியாது. இன்று கட்டாயம் நீர் எனக்கு விடை கொடுத்தனுப்ப வேண்டும்.

**பாரி:** அப்படி என்ன அவசரம் நேர்ந்ததோ?

**ஔவையார்:** உடனே புறப்பட்டு வருமாறு அதியமான் எமக்கு ஓலை அனுப்பி யிருக்கிறார்.

**பாரி:** அதியமான் ஓலை அனுப்பி யிருக்கிறார்; ஆனால், மூவேந்தர்களுக்கும் அஞ்சாத பறம்புமலை யதிபனும், பாவலர்க்கு எளியனுமாகிய பாரியோ, இன்னும் சிலநாள் இங்கு தங்கிவிட்டுச் செல்லுமாறு உம்மை நேரில் வேண்டிக் கொள்கிறான்.

**ஔவையார்:** அரசே! உமது வேண்டுகோளை மறுக்க எமக்கு இஷ்டமில்லை. ஆயினும், அதியமான் ஓர் அவசர காரியத்தின் நிமித்தம் என்னை அழைத்திருக்கிறார்.

**பாரி:** நான் உம்மை இருக்கச் சொல்லுவதும் ஓர் அவசியத்தின் பொருட்டே.

**ஔவையார்:** அவசியத்திலும் தாரதம்மிய முண்டு. ஓர் அரசாங்க அலுவலின் பொருட்டு அவர் என்னைத் தம்மிடம் வரச் சொல்லுகிறார்.

**பாரி:** அரசர்கள் சம்பந்தப்பட்டது எல்லாம் அரசாங்க அலுவல்கள் தாமே!

**ஔவையார்:** நடுச்சபையில் இதை வெளியிட வேண்டா மென்றிருந்தேன். தமக்கு ஏதோ ஒரு பேராபத்து நேரவிருப்பதாகவும், என்னை வேற்றரசன் ஒருவனிடம் தூதனுப்ப விரும்புவதாகவும், நான் சென்றால் அவ் வாபத்து நீங்கலாம் என்றும் அதியமான் குறிப்பிட்டிருக்கிறார். இனி என்னால் தாமதிக்க முடியாது. தயவு செய்து விடை கொடுக்க வேண்டும்.

**பாரி:** (சிரித்துக்கொண்டு) உம்மைப்போன்ற நல் லிசைப் புலவர்களைத் தம்பாலிழுப்பதற்கு அரசர்கள் செய்யும் சூழ்ச்சிகளில் இது ஒன்று. இந்த ஒரு விஷயத்தில் மட்டும் அரசர்கள் பொய் சொல்லப் பின் வாங்குவதில்லை. அதியமானும் அதில் இளைத்தவரல்ல. ஆகையினால் ஔவைப் பிராட்டியாரே! சூழ்ச்சி வலையில் சிக்கிக் கொள்ள வேண்டாம்.

**ஔவையார்:** அரசே, அப்படி யல்ல. அதியமான் என்னிடம் மனம் விட்டுப் பேசக்கூடியவர். இல்லாதது ஒன்றைச் சொல்லமாட்டார். நான் போகவேண்டும்.

**பாரி :** நீர் போகவேண்டாம் என்று நான் சொல்ல வில்லை. நீர் பறம்புமலைக்கு மட்டுமல்ல, தமிழ கத்திற்கே, ஏன் இந் நிலவுலகத்திற்கே உரியவர். உம்மைப் பாரியின் சமஸ்தானத்தில் அடைத்து விட முற்படேன். இன்னும் சில நாட்கள் இங்கு தங்கிவிட்டுச் செல்லுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

**ஔவையார் :** (பரபரப்புடன்) பாரிவேளே! மன்னிக்க வேண்டும். அதியமானுக்கு 'ஆபத்து' என்பதை அறிந்தவுடன் என் மனம் ஒரு நிலையில் இல்லை. என்னென்ன வெல்லாமோ எண்ணி, எங் கெங்கோ அலைகிறது. நான் உடனே புறப்பட வேண்டும்.

**பாரி :** உம்முடைய மன நிலையை நான் உணர்கிறேன். இன்னும் இரண்டு நாட்கள் தங்கிவிட்டுப் போகலாம்.

**ஔவையார் :** மலையுடைவேளே! புலவருக்கு நீர் கொடை கொடுப்பதாக இக் குவலயம் முழுவதும் போற்றுகிறது. அவர்களுக்கு விடை கொடுத் தும் நீர் பழக வேண்டும். நான் விடையிரந்து நிற்கிறேன். கருணை புரிய வேண்டும்.

**பாரி :** (புன் சிரிப்புடன்) அத் துறையில் நமது ஆற்ற லின்மையை நாம் ஒப்புக் கொள்கிறோம். இன் னும் ஒரு நாளாவது அடியேனுடன் தங்கி விட்டுச் செல்லவேண்டும்.

**ஔவையார் :** அரசே! இதற்குமேல் நான் என்ன கூறு வேன்? (கண்களில் நீர் ததும்ப) யான் அதிய

மானுடைய அன்பிற்குப் பாத்திரப் பட்டவள். அப் பூமானுக்கு ஆபத்து நேர்ந்திருக்க, நான் அரைக்கணமேனும் இங்கு தங்கியிருத்தல் அறமாகாது. மேலும் என் உள்ளம் இசையவில்லை. இன்றே விடைகொடுத்தருள வேண்டும்.

**பாரி :** இப்பொழுதே புறப்பட வேண்டுமா ?

**ஔவையார் :** ஆம், அரசே !

**பாரி :** (நாக்குழற) உம்மைப் போன்ற புலவர் பெருமக்களைத் தகுந்தபடி சன்மானிக்க, இக் குவலயம் முழுவதும் ஒரு குடைக்கீழ் ஆளும் சக்கரவர்த்தியாலும் இயலாது. அடியேனோ ஒரு குறுநில மன்னன். நான் கொடுக்கும் பொருள்களின் விலை மதிப்பைப் பொருட் படுத்தாது. அன்பையே பெரிதாக மதித்து, பெற்றருள வேண்டும். (யானைகள், தந்தம், பொன் போன்ற குறிஞ்சி நிலப் பொருள்களும்; முத்து, பவளம் போன்ற நெய்தல் நிலப் பொருள்களும்; மருத நிலத்தைச் சேர்ந்த ஆனிரைகளும், பாலை நிலத்தைச் சேர்ந்த அசுவங்களும், ஒட்டகங்களும் வரையின்றி வழங்குகின்றான்.)

**ஔவையார் :** (அப் பொருள்களைக் கண்டு பிரமித்து) அரசே ! உமது வள்ளன்மையைப் போற்றுகிறேன். நானோ பாணன் மகள். எனக்கெதற்கு இவ் விலையுயர்ந்த பொருள்களெல்லாம் ? பசியுறும் போதெல்லாம் ஒரு பாட்டுப் பாடிக் கூழ் குடித்து வழிநடப்பவள் நான். எமக்கு யாதும் ஊரே, யாவருங்கேளீரே! நாளை என் செய்

வோம் என்ற கவலை நாவலர்க்கு ஏது? இந்த யானைகளும், குதிரைகளும், பொன்னும், மணியும் அழியுந் தகைமையின. ஆனால் நீர் எம்மீது வைத்த அன்போ என்றும் அழியாதது. அது ஒன்றையே பெரும் கொடையாகக் கொண்டு நாம் செல்ல விரும்புகிறோம்.

**பாரி :** மகளிர் நாயகமே! மன்னிக்க வேண்டும். பாரியிடம் வந்தோர் வெறுங்கையாய்ச் சென்றனர் என்ற பழிச்சொல் நமக்கு ஏற்படக்கூடாது.

**ஔவையார் :** வீண் பற்றுக்களுக்கும், துன்பங்களுக்கும் என்னை இடமாக்குகிறீர். ஆயினும் நீர் பேரன்பு கொண்டு எனக்கீந்த பொருளானமையால் ஏற்றுக் கொள்கிறேன். விடை பெற்றுக் கொள்ளட்டுமா?

**பாரி :** ஒரு விஷயம். வழியில் கள்வர் பயமிருக்கலாம். ஆகையினால் கவனமாய்ச் செல்லவேண்டும். எதற்கும் உம்முடன் துணைக்காக என் வீரர்கள் சிலரை உடனனுப்புகிறேன். மலை நாடல்லவா?

**ஔவையார் :** (அலக்ஷியப் புன்னகையுடன்) கலைச் செல்வத்தையே பெருஞ் செல்வமாகக் கொண்ட எம்மைக் கொள்ளையடிக்க வல்லார் யார்?

**பாரி :** நான் அதைச் சொல்லவில்லை. மற்றதைக் குறிப்பிட்டேன்.

**ஔவையார் :** இன்றிருந்து நாளை அழியக்கூடிய அப்பொருளை நாங்கள் பொருளாகவே மதிப்பதில்லையே!

**பாரி :** எதற்கும் என் வீரர்களை உமக்குத் துணையாக அனுப்புகிறேன்.

**ஔவையார் :** நான் விடைபெற்றுக் கொள்கிறேன்.

**பாரி :** தமிழ்ப் பெருமகளே! இன்று நீர் நம்மை விட்டுப் பிரிந்த போதிலும் கூடிய சீக்கிரம் உம் வரவால் நம்மை மகிழ்விப்பீர் என்ற நம்பிக்கையுடனேதான் உமக்கு விடை கொடுக்கிறோம். அடியேனை மறந்து விடவேண்டாம்.

**ஔவையார் :** அதியமானிடம் என் வேலை முடிந்ததும், பறம்புமலையை நோக்கியே என் கால்கள் புறப்படும். உம்மை எப்படி மறக்க முடியும்?

**பாரி :** (புன் சிரிப்புடன்) அதற்கு முன்னால் இல்லை! சரி! (ஔவை சென்ற பின்பு) அதற்கு முன்னால் ஔவையார் இங்கு வரமாட்டாராம் பார்க்கலாம்!

# இரண்டாம் காட்சி

*[அதே நாள் மாலை, கபிலரும், பிரதானிகளும் புடைசூழப் பாரி வீற்றிருக்கிறான். அவன் யாரோ ஒருவரை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது போல் தோன்றுகிறது. சேவகன் உள்ளே நுழைகிறான்.]*

**சேவகன் :** (வணங்கி) ஒளவையார் வந்திருக்கிறார்.

**பாரி :** (குறும்பு நகையுடன்) ஒளவையாரா? என்னடா உளறுகிறாய்?

**சேவகன் :** ஆம், அரசே! ஒளவையார்தான் வந்திருக்கிறார்.

**பாரி :** (மீண்டும் குறும்பு நகையுடன்) அவருடைய வரவு என்றும் நமக்கு மகிழ்ச்சி தரக்கூடியதே! ஆனால் இவ்வளவு சீக்கிரம் அவரை எதிர் பார்க்கவில்லையே. என்ன விசேடமோ? (அவரை வரவேற்கச் சிம்மாசனத்தினின்றும் எழுந்து செல்கிறான். அதற்குள் ஒளவையார் மண்டபத்திற்குள் வந்துவிடவே, யாவரும் எழுந்து நிற்கிறார்கள்).

**பாரி :** வரவேண்டும்! வரவேண்டும்! இவ்வளவு சீக்கிரம் நமக்கு இப் பாக்கியம் கிடைக்குமென்று நாம் கனவிலுங் கருதவில்லை. (புன் சிரிப்பு) மிக்க மகிழ்ச்சி!

**ஒளவையார் :** ஆனால் நான் கூறப்போகும் விஷயம் உமக்கு மகிழ்ச்சி யூட்டக்கூடியதாயிராது என்று அஞ்சுகிறேன்.

**பாரி :** அப்படி யாது விசேடமோ? ...............அதிய மானுக்கு.........அப்படியானல் இன்றே நமது படைகளைத் திரட்டுவதற்கு நான் உத்தரவிடு கின்றேன்.

**ஔவையார் :** அப்படி யொன்றுமில்லை. நீர் கொடுத்த பொருள்கள்................

**பாரி :** ஆம், அவை உம்முடைய கௌரவத்திற்கும் புலமைக்கும் போதாவென்பதை நாம் நன்கு உணர்வோம். அதைப்பற்றி நான் முன்பே குறிப் பிட்டேன். ஆயினும் என் பிழையைப் பொறுத் தருளவேண்டும். இன்னும் தங்களுக்குப் பிரிய மானவை என்னென்னவோ, அவைகளை என் னிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**ஔவையார் :** அரசே, சற்று நிதானமாய்க் கேட்க வேண்டும். நீர் கொடுத்த பொருள்கள் அனைத் தையும் கள்வர் கொள்ளையிட்டுக் கொண்டனர். அதை உம்மிடம் முறையிடவே வந்தேன்.

**பாரி :** ச்! இவ்வளவுதானு! யாம் என்னவோ என்று அச்சமுண்டோம். யானைகளும் ஒட்டகங்களும் குதிரைகளும், பசுக்களும் இறக்குந் தன்மையன. பொன்னும் மணியும், பவளமுந் தந்தமும் அழி யும் நீர்மையன! அவைகளுக்காக வருந்த வேண் டாம், ஔவைப் பிராட்டியாரே! (அவனுடைய இதழ்களில் ஓர் புன் சிரிப்பு)

**ஔவையார் :** இந்த உபதேசத்தைப் பெறுவதற்காக நான் உம்மிடம் வரவில்லை.

**பாரி :** (ஔவையின் வார்த்தைகளைக் கவனியாதது போல்) செல்வம் நிலையாது. அது இன்றிருந்து நாளை அழியக்கூடியது. ஏன்? இப்பொழுதிருந்து இன்னுஞ் சற்று நேரத்தில் அழியக்கூடியது! உதாரணமாக இப்பொருள்களையே எடுத்துக் கொள்ளலாம். இன்று காலை அவை என்னிடமிருந்தன. பிறகு உம்மிடம் வந்தன. இப்பொழுது யார் யாரிடமோ சென்று விட்டன! இதுதான் நிலையற்ற பொருள்களின் இயற்கை!

**ஔவையார் :** அது எனக்குத் தெரியாமல் இல்லை.

**பாரி :** அதை யாமும் அறிவோம். பொருள் தங்க விடம் இல்லாத வரைக்குந்தான் புலவர்கள் அதன் நிலையாமையைப் பற்றிப் பேசுவார்கள். அது கிடைத்தவுடன் அவர்களுக்குங் கூடச் சிறிது சபலம் ஏற்பட்டு விடுகிறது. அதற்கு நீரே உதாரணம். இன்று காலையில்தான் நீர் வேதாந்தம் பேசினீர். ஆனால், இப்பொழுது உம்முடைய யானைகளும், குதிரைகளும் பறி போய் விட்டன என்று என்னிடம் முறையிட வந்து விட்டீர்!

**ஔவையார் :** என் முன்னால் இதோ வீற்றிருப்பது பாரி தானா? என்னை இங்ஙனம் ஏளனம் செய்வது பறம்பு மலை வள்ளல் தானோ? புலவர்களால் போற்றப்படும் பாரிவேளா என்னிடம் இங்ஙனம் வார்த்தையாடுவது? நான் கனவு காண்கிறேனோ!

**பாரி:** ஔவைப் பிராட்டியாரே! நீர் கனவு காணவில்லை. உமக்குச் சந்தேகமிருந்தால், பக்கத்தில் கபிலர் வீற்றிருப்பதைப் பார்த்தாவது சந்தேகந் தெளியலாம்.

**ஔவையார்:** கபிலரே! நீரும் பக்கத்தில் இருந்து, இவையெல்லாம் பார்த்துக்கொண்டு மௌனமாகவா இருக்கிறீர்?

**கபிலர்:** நீரிற் குமிழி இளமை; நிறை செல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந் திரைகள்.

ஆகையினால் அழியும் பொருள்களுக்காக அல்லல் உறல் மக்களுக்கு அழகன்று.

**பாரி:** (உரத்த சிரிப்புடன்) பேஷ்! பேஷ்! நன்றாய்ச் சொன்னீர்!

**ஔவையார்:** (மிகுந்த கோபத்துடன்) பாரி! கேவலம் நீர் கொடுத்த யானைகளும், குதிரைகளும் பறி போயினவே என்று முறையிடுவதற்காக நான் வரவில்லை. தமிழகத்தில் இது யாங்கணும் நடக்காததோர் நிகழ்ச்சி!

**பாரி:** எது?

**ஔவையார்:** புலவர்கள் கொள்ளையடிக்கப் படுவது! அதுவும் புலவர்களுக்கெல்லாம் புரவலனாய் விளங்கும் உமது நாட்டில் அது நடந்ததென்றால் அது உமக்கு அவமானமாக இல்லையா?

**பாரி:** (அலக்ஷியப் புன்னகையுடன்) ஓஹோ! நம்முடைய மானத்தைக் காப்பாற்றுவதற்காகத் தான் இவ்வளவு விரைந்து வந்தீரோ? அதிய

மானிடம் நீவிர் சென்ற வேலை முடிந்து விட்டது போலும்! வெகு மகிழ்ச்சி!

**ஔவையார்:** ஆமாம்! இது உண்மையிலேயே நீர் மகிழ்ச்சி கொள்ள வேண்டிய விஷயந்தான்.

**பாரி:** நீர் என்னென்ன மனக்கோட்டைகள் எல்லாம் கட்டியிருந்தீரோ, யாம் அறிவோமா? முத்தா ரங்களாலும், பொன்னுபரணங்களாலும் உம்மை யழகு செய்து கொண்டு, நாம் கொடுத்த சேர நாட்டுக் களிற்றின் மீது அழகிய அம்பாரி ஒன்றை அலங்கரித்து, அதன் மீது நீர் ஏறிப் பவனி சென்று, அதியமானுக்கு முன்னல் மிகுந்த கௌரவத்துடன் இறங்க வேண்டு மென்று நினைத்திருந்திருக்கலாம். அதியமானின் பகையரசனிடம் தூது செல்லும்போது, நாம் கொடுத்த இப் பரிவாரங்கள் புடை சூழச் சென்றால் உம்முடைய நாவன்மைக்கு அவன் வசமாகாத போதிலும், உம்முடன் வந்திருக்கும் யானைகளையும், குதிரைகளையும், ஒட்டகங் களையுங் கண்டாவது அவன் பயந்து விடுவான் என்றும் நீர் நினைத்திருப்பீர். எல்லாம் இப் பொழுது வீணாய் விட்டது! பாழும் அக்கள்வர் களால்! பாவம்! அவர்கள் இதை எல்லாம் கண்டார்களா?

**ஔவையார்:** பாரீ! யாரைக் குறித்து இங்ஙனம் பேசு கிறீர்?

**பாரி:** சரி, போனால் போகிறது. முற்றத் துறந்த முனிவர்களுக்கும் பொருளாசை ஏற்படுவது

சகஜமே. நீர் இப்பொழுது என்ன சொல்கிறீர் ?

ஔவையார் : (மிகுந்த கோபத்துடன்) எனக்கு அவமானமிழைத்த அக் கள்வர்களை இப்பொழுதே பிடித்துக்கொண்டு வந்து, தகுந்த தண்டனை விதிக்க வேண்டும். இல்லையானால் என் மனம் ஆறாது !

பாரி : ஆறுவது சினம் ! (சபையில் கொல்லென்ற சிரிப்பு!)

(ஔவை, உதடுகள் துடிக்க, விழிகள் சிவக்கக் கோபக் கனல் தோன்ற விழிக்கிறார்.)

பாரி : (புன் சிரிப்புடன்) பிறர்க்கு உபதேசம் செய்வது எவர்க்கும் எளிது. அதன்படி நடப்பதுதான் கடினம். சரி, இப்பொழுது உம்முடைய வழக்கைச் சொல்லும். முறைப்படி விசாரிக்கலாம்.

ஔவையார் : பறம்பு மலைக் காடுகளினூடே நானும் என் பரிவாரங்களும் சென்று கொண்டிருக்கையில், சில கள்வர்கள் வந்து என் பொருள் யாவையும் கொள்ளையிட்டுச் சென்றனர். அவர்களைத் தேடிப் பிடித்து விசாரிக்க வேண்டுகிறேன்.

பாரி : இப்படி யெல்லாம் நேரும் என்று தானே நாம் கவனமாய்ப் போகுமாறு எச்சரித்தோம் !

ஔவையார் : இப்பொழுது நடந்ததற்குப் பரிகாரம் கேட்கிறேன்.

பாரி : உம்முடன் துணைக்குச் சில வீரர்களை அனுப்பினோமே, அவர்கள் என்னவானார்கள் ?

ஔவையார் : அவர்களா ? ஆம், அவர்களைப் பற்றிச் சொல்ல மறந்து விட்டேனே. ஆண்களிடையே

கூட அத்தகைய கோழைகளை நான் இதுவரை பார்த்ததில்லை.

(சபையில் யாவரும் நகைக்கிறார்கள்)

**கபிலர்:** (புன் சிரிப்புடன்) உம்முடைய குறும்பு இன்னும் போகவில்லையே!

**பாரி:** (சிரித்துக்கொண்டு) இத்தகைய சல்லாபத்தில் தானே நாம் மோகங் கொண்டோம்! ஆமாம், அவர்கள் என்னதான் செய்தார்கள்?

**ஔவையார்:** கள்வர் தோன்றியது தான் தாமதம். அவர்கள் வியர்த்து விறுவிறுத்து, கால்களும் கைகளும் 'வெலவெல'வென நடுங்கக் 'குய்யோ முறையோ' எனக் கூவிக்கொண்டு, நாலா திசைகளிலும் ஓடி விட்டார்கள்.

**பாரி:** சிறந்த நடிகர்கள்! அவர்களுடைய திறமையை மெச்சுகிறோம். நீர் என்னென்னவோ வீரமாய்ப் பேசுகிறீர், வீரமாய்ப் பாடுகிறீர்; உண்மையில் உம்முடைய தைரியம் எப்படி இருக்கிறதென்று பரிசோதிப்பதற்காகவே அப்படி ஓடியிருக்கிறார்கள்!

**ஔவையார்:** ஆமாம்! மரப் பொந்துகளிலும் பாறையிடுக்குகளிலும் என்னுடைய வீரத்தை இன்னும் பரிசோதித்துக் கொண்டே இருக்கிறார்கள் போலும்! அத்தகைய வீர சிகாமணிகளை வைத்துக் கொண்டு, நீர் மூவேந்தரை எப்படி எதிர்க்கப் போகிறீரோ, யாம் அறியோம்!

(இச் சமயம் பாரி ஒரு சமிக்ஞை செய்யவே, ஔவையுடன் சென்ற வீரர்களெல்லாம் மண்டபத்திற்குள் நுழைந்து வரிசையாய் நின்றார்கள்.)

ஔவையார்: (ஆச்சரியத்துடனும் ஏளனத்துடனும் அவர்களை நோக்கி) இதோ வந்து விட்டனர் அவ் வீர மணிகள்!

பாரி: அதிருக்கட்டும். உம்மைக் கொள்ளை யடித்த கள்வர்களை இப்பொழுது கொண்டு வந்தால், நீர் அடையாளங் கண்டு கொள்ள முடியுமா?

ஔவையார்: ஓ! நன்றாய்!

பாரி: சேவகா! அக்கள்வர்களை யெல்லாம் கொண்டு வந்து நிறுத்து.

ஔவையார்: (ஆச்சரியத்துடனும் சந்தோஷத்துடனும்) அவர்களைப் பிடித்து விட்டார்களா உமது வீரர்கள்!

பாரி: அதைவிட அவர்களுக்கு வேலை!

ஔவையார்: பேஷ்! இதுவன்றோ பாரிக்கழகு!

(கள்வர்கள் வரிசையாக நிறுத்தப் படுகிறார்கள்.)

ஔவையார்: (ஆனந்தத்துடன்) இவர்களே தாம்! நன்றாகத் தண்டிக்க வேண்டும். தண்டனை குறையக் கூடாது. புலவர்களைக் கொள்ளையிடுவது எத்தகைய பெருங் குற்றம் என்பதை யாவரும் அறிய வேண்டும்!

பாரி: (கள்வர்களை நோக்கி) நீங்கள் இப்பெரு மகளைக் கொள்ளையிட்டது உண்மைதானா?

கள்வர்கள்: (அனைவரும் ஒரே குரலில்) ஆமாம்!

ஔவையார்: பாரும் அவர்களுடைய அகந்தையை! மரண தண்டனைகூட அவர்களுக்குப் போதாது;

பாரி: (கள்வர்களை நோக்கி) உமது சேவையை மெச்சினோம். நீங்கள் இன்றே நமது உண்மைத் தொண்டர்களானீர்கள்! நீவிர் கொள்ளையிட்ட பொருள்கள் யாவும் உம்மையே சேரும்!

ஔவையார்: (ஆத்திரத்துடன்) என்ன! என்ன! உமது நீதி வெகு அழகாயிருக்கிறது, பாரீ!

கபிலர்: நாட்டின் உண்மையான தொண்டர்க்கு உகந்த பரிசளிப்பது அரசருடைய கடமை இல்லையா?

ஔவையார்: ஆனால் இவர்கள்?

கபிலர்: நாட்டுப் பொருள்கள் நாட்டிற் கப்பால் போகவிடாது காத்தது சிறந்த தொண்டில்லையா?

ஔவையார்: ஓஹோ! அப்படியா? (மிகுந்த கோபத்துடன்) உமக்கும் அக் கொள்ளையில் பங்குண்டோ? நீரும் அக் கொள்ளைக் காரர்களில் ஒருவர் தாமோ?

பாரி: அவர் மட்டுமல்ல! யானும் அதில் சம்பந்தப் பட்டவனே! யானே பிரதான கொள்ளைக் காரன்!

ஔவையார்: (ஆச்சரியத்துடன் பிரமித்து) பாரீ!

பாரி: (சிம்மாசனத்தினின்றும் எழுந்து ஔவையின் முன்னால் முழந்தாளிட்டுக் குரல் தழு தழுக்க) புலமை மிக்க பெரியோய்! நுமது தமிழறிவில் நாம் கொண்ட காதலினால் இக்காரியத்தைச்

செய்யத் துணிந்தோம். மன்னித்தருள வேண்டும். உம்மைப் போன்ற பெரியோர்களைப் பிரிந்து, பாரி எங்ஙனம் உயிர் வாழ்வான்! உம்மை மீண்டும் எம்மிடம் வரவழைப்பதற்கே இதை ஏற்பாடு செய்தோம். எம்மை மன்னிப்பீரா?

**ஔவையார்:** பாரி! இன்றுதான் உம்முடைய கொடையின் முழுத் திறனையும் நான் உணர்ந்தேன். கொடுத்துப் புகழ் கொண்டோர் இப்புவியில் அனந்தம். ஆனால் பறித்துப் புகழ் கொண்டோன் பாரி ஒருவனே! இச் செயலுக்காக உம்மை உலகம் முழுதும் போற்றும் ஒரு காலத்தை யான் என்னுடைய எதிர்காலக் கண்களால் பார்க்கிறேன். தமிழ் மீதும், தமிழ்ப் புலவர் மீதும் இத்தகைய பேரன்பு கொண்ட ஒரு வள்ளலின் வேண்டுகோளைக் கொஞ்சமேனும் மதியாமல் யான் உதாசீனம் செய்து விட்டுப் போனேனே, அதை நீர் மன்னிப்பீரா?

(பாரி மௌனமாய் ஆனந்தக் கண்ணீருகுத்துக் கொண்டு நிற்கிறான்.)

**ஔவையார்:** நீர் மன்னித்து விடுவீர். அது உமக்குப் பெரிதல்ல. ஆனால் உலகம் என்னை மன்னிக்காது. கள்வர்கள் என் பொருளைப் பறித்து விட்டார்கள் என்று உம்மிடம் முறையிட வந்தேன். ஆனால் நீர் எனது உள்ளத்தையே பறித்து விட்டீர். இதை யாரிடம் முறையிடுவது?

**பாரி:** ஔவைப் பிராட்டியாரே, மன்னிக்கவேண்டும்!

ஔவை: இனி நீர் என்னைப் "போ, போ!" என்று பிடரியைப் பிடித்துத் தள்ளினாலும், உம்மை விட்டு அகலுவதற்கு எனக்கு எங்ஙனம் மனம் வரும்? இனி நான் உமது அடிமை!

பாரி: பிராட்டியாரே! இன்றே நான் பிறவிப் பயனை எய்தினேன்! உம்மைப்போன்ற நல்லிசை மிக்கப் பெரியோர் எப்பொழுதும் நம்மைச் சூழ்ந்திருக்க வேண்டுமென்பது நமது அவா. உம்மைப் பிரிந்து நான் எங்ஙனம் வாழ்வேன்? ஆயினும் நான் எனது கடமையை உணர்கிறேன். நீர் அதியமானுடைய ஓலையை எங்ஙனம் மதிக்கிறீரோ, அதைப்போல நாமும் கௌரவிக்கிறோம். அதியமானுக்கு வந்த ஆபத்து நமது ஆபத்தே! ஆகையால் எமது ஆவலைப் பூர்த்தி செய்வதற்காக, இன்னும் சில நாட்கள் இங்கு தங்கி இருந்துவிட்டு நீர் செல்லலாம். எனது பேதமையினால் ஏற்கனவே ஒரு சூரியனைப் பறம்புமலை நீழலில் அடைத்துவிட்டேன். இன்னொரு சூரியனையும் அடைக்க முயலமாட்டேன்! (பாரியின் கண்களில் நீர் ததும்புகிறது.)

ஔவை: (கண்களில் நீர் ததும்ப நாக் குழற) பாரி! உமது தியாகத்தின் திறனை நான் இப்பொழுது தான் முற்றிலும் உணர்கிறேன். இதுவே நீர் கொடுத்த கொடைகளில் எல்லாம் பெருங் கொடை!

(பின்னணிச் சங்கீதம்) (திரை)

**பாரி பறித்தபறியும் பழைய னூர்க்**
**காரி கொடுத்த களைக்கொட்டும் — சேரமான்**
**வாராய் என வழைத்த வாய்மையும் இம்மூன்றும்**
**நீலச் சிற்றாடைக்கு நேர்.**

# பிள்ளையா பூதமா?

## *பாத்திரங்கள்*

***கோவிந்தசாமி,*** பி. ஏ., எல். டி: ஓர் உபாத்தியாயர்

***ஜானகி:*** அவருடைய மனைவி

***சுந்தரியம்மாள்:*** அவருடைய தாயார்

***சாரதாமணி:*** சுமார் இரண்டரை வயதுள்ள அவருடைய குழந்தை

# முதற் காட்சி

[வெள்ளிக்கிழமை மாலே, சுந்தரியம்மாளும், ஜானகியும் வீட்டில் வேலே செய்து கொண்டிருக்கின்றனர்.]

ஜானகி: அம்மம்ம, இந்தப் புள்ளே படுத்திற பாடு சொல்லி முடியலே! இது ஏன்தான் பிறந்ததோ? சனியன்!

சுந்தரியம்மாள்: இப்ப என்னடி பண்ணுது ஒம்புள்ளே? காலேயிலே யிருந்து இந்தப் பாடா படுத்தும்?

ஜானகி: நான் சாம்பாருக்குப் புளிகரச்சிக்கிட்டிருக்கேன். அது நான் கரைக்கிறேண்ணு வந்து மேலுங் கீழுமா கொட்டிது! என்ன பண்ணித் தொலேயிறது?

சுந்தரியம்மாள்: ரெண்டரை வயசுப்பிள்ளே இப்படி எல்லாம் பண்ணுமாக்கும்? சிறுபிள்ளேயா லக்ஷணமா திங்கிறதைத் தின்னேம், உங்கிறதை உண்டோம், ஒறங்கிஞே மிண்ணிருக்கும், கண்டிருக்கோம். பெரியவக செய்யிற வேலேக்கெல்லாம் நான் நான் இண்ணு வரக் கண்டோமா? நானும் எத்தனேயோ புள்ளேயை வளத்திட்டேனம்மா, இப்படி ஒம் புள்ளேயைப் போல ஒரு புள்ளேயுமில்லே!

சாரதாமணி: பாப்பா புளி காய்க்கிறே கொண்ணு!

ஜானகி: நீ புளி கரச்சு நாசமாய்ப்போனே! விடு எமனே!

(குழந்தையிடம் இருந்து பலவந்தமாகப் பாத்திரத்தைப் பிடுங்கிக்கொண்டு, சற்று அப்பால் சென்று ஜானகி புளி கரைக்கிருள். குழந்தை அழுது கொண்டிருக்கிறது. சற்று நேரத்திற்குப் பின் பாட்டி மிளகாய் அரைத்துக் கொண்டிருப்பதைச் சாரதா பார்க்கிருள்.)

**சாரதாமணி :** பாப்பா மொயகா அரக்கப் போறேன்!

**சுந்தரியம்மாள் :** புளியை விட்டு மிளகாய்க்கு வந்திருச்சிடி சனியன்!

**ஜானகி :** மிளகாயைக் கண்ணிலே கிண்ணிலே வச்சுக்கிட்டு அழுது தொலையாதடி, வாடி இங்கே!

**சுந்தரியம்மாள் :** இந்தத் துன்பம் எங்கேயாவது உண்டா? விரல்கிரல் நசுங்கிப் போகுமிடி, போடீ.

**சாரதாமணி :** பாப்பா அரக்கிறே குரு!

**ஜானகி :** ஐயோ, அந்த மிளகாயிலே கையை வச்சிருச்சு, கண்ணிலே கிண்ணிலே வச்சிரப்போகுது. அதைக் கழுவி விடுங்க.

**சுந்தரியம்மாள் :** வாடி கையைக் கழுவ!

(குழந்தை வரமாட்டேன் எனப் பிடிவாதம் செய்கிறது. பாட்டி பலவந்தமாய்ப் பிடித்துத் தூக்கப் போகிருள். குழந்தை கைகளையுங் கால்களையும் உதறுகிறது. இந்தக் கலவரத்தில் அதன் கையிலுள்ள மிளகாய் கண்ணில் தெறிக்க, "கண்ணு எயிது, கண்ணு எயிது!" என்று குழந்தை வீறிட்டு அலறுகிறது.)

**சுந்தரியம்மாள் :** ஒரு வேலை ஓடவிட மாட்டேன் என்கிறது. இதுக்குப் பண்டிதம் பண்றதுக்கே நாளெல்லாம் சரியாப் போகுதே!

(குழந்தையினுடைய கைகளையும் கண்ணையுங் கழுவிக் கண்ணுக்குப் பாட்டி விளக்கெண்ணெய் போடுகிருள், மாலை ஐந்தரை மணிக்கு மேல் கோவிந்தசாமி பள்ளிக்கூடத்திலிருந்து வருகிருர்.)

**கோவிந்தசாமி:** என்ன ஆகியிருக்கிறது? வயிறு பசி எடுக்கிறதே! சாப்பிடலாமா?

**ஜானகி:** ஒண்ணும் ஆகலே! எல்லாம் இனிமேல் தான்!

**கோவிந்தசாமி:** ஏன்? முன்பாவது இரண்டு பேர், இப்பொழுது வேலைக்கு மூன்று பேர் இருக்கிறீர்களே; ஏன் தாமதமாகிறது?

**ஜானகி:** மூன்று பேர் எப்படி?

**கோவிந்தசாமி:** நீ ஒன்று, அம்மா இரண்டு, சாரதா மூன்று பேர்!

**ஜானகி:** உங்கள் மகளை ஒரு ஆளாகச் சேர்த்து விட்டீர்களா? ஆமாம்! அவள் வேலை செய்யாமல் இருந்தால் போதாதா! அவளுடைய துன்பம் சகிக்க முடியவில்லை!

**கோவிந்தசாமி:** அவள் உனக்கு உதவியா யிருப்பாள் என்றல்லவா நான் நினைத்தேன்!

**ஜானகி:** ஏன் நினைக்க மாட்டீர்கள்? அதுவும் நினைப்பீர்கள்! அதற்கு மேலும் நினைப்பீர்கள்! உங்களுக்கென்ன, அப்பழுக்குப் படாமல் சட்டையும், வேஷ்டியும் உடுத்திக் கொண்டு போகிறீர்கள். உட்கார்ந்த நாற்காலியை விட்டிறங்காமல் கன்னு பின்னு இன்னுரெண்டைக் கத்திப்பிட்டு வந்து விடுகிறீர்கள். வீட்டிலே

யிருந்து ரெண்டுங் கெட்ட பிள்ளை ஒன்றை வைத்துக் கொண்டு வேலை செய்கிறவளுக்கில்ல அந்தக் கஷ்டம் தெரியும்! ஒருநாளைக்கு வீட்டி லிருந்துதான் உங்கள் மகளுடைய லீலைகளை யெல்லாம் பாருங்களேன். ரஜா நாளாயிருந்தால் அங்கே போறேன், இங்கே போறேன் என்று கிளம்பி விடுகிறீர்கள். ரெண்டரை வயசுக் குழந்தை, வீட்டு வேலையில் எனக்கு உதவி செய்யுமின்னும் சொல்றீய! ஐயோ காலமே! உங்களோடுங் கூத்துத்தான்!

கோவிந்தசாமி: உம், அப்புறம்.

ஜானகி: நான் போறேன், சப்பாத்தி போட. உங் களோடு வம்பளந்திக்கிட்டிருந்தா, வேலை நடக் குமா?

(சமையலறைக்குப் போகிருள்)

சாரதாமணி: நானும் போருவேன், தப்பாத்தி!

(சாரதாவும் பின்ஞல் ஓடுகிருள்)

கோவிந்தசாமி: சாரூ, இங்கே வாம்மா, அப்பாகிட்டே வா!

சாரதாமணி: ... ... ... ... ... ... ... ... ...

(சிறிது நேரத்திற்குப் பின்)

ஜானகி: போடி, மாவுருண்டையை எடுத்துப் பாழாக்காதேடி.

சுந்தரியம்மாள்: ஒனக்கெல்லாம் சப்பாத்தி போடத் தெரியுமா? வாடி இங்கே!

ஜானகி: உங்களைத் தானே, அங்கே உக்காந்து கொண்டு என்ன செய்றீய! மக உதவி செய்றதை வந்து பாருங்களேன்!

கோவிந்தசாமி: முதலாவது கொஞ்சம் சர்பத்தாவது போட்டுக் கொண்டு வா. ரொம்பக் களைப்பா யிருக்கிறது!

ஜானகி: கிளாஸ் டம்ளரையும், எலுமிச்சம் பழத்தை யும் எடுத்துக் கொண்டு வாங்க, அத்தை.

சாரதாமணி: பாப்பா எத்து வரேன்! பாப்பா எத்து வரேன்!

(குழந்தை அறைக்குள் ஓடுகிறது.)

சுந்தரியம்மாள், ஜானகி: (இருவரும் சேர்ந்து) ஐய்யோ! நீ டம்ளரை ஒடச்சிருவேடி! ஒடச்சிருவேடி!

(தடதடவென்று இருவரும் அறைக்குள் ஓடுகிறார்கள். அதற்குள் குழந்தை டம்ளரை எடுத்துக் கொண்டு ஓடி வருகிறது. ஆனால் கலவரத்தில் போட்டு உடைத்து விடவே, இருவரும் குழந்தையை வைது அடிக்கிறார்கள். குழந்தை கீழே புரண்டு அழுது கொண்டே சிறிது நேரத்தில் அயர்ந்து தூங்கி விடுகிறது)

ஜானகி: பிள்ளையாராட்டமா பேசாம லிருக்கிறீர்களே! பார்த்தீர்களல்லவா உங்கள் மகள் செய்கிற உதவியை?

கோவிந்தசாமி: உம்.

ஜானகி: கழுதை, இது புள்ளையா? பூதந்தான் சனியன்!

கோவிந்தசாமி: ஆம், உண்மையிலேயே அது பூதந்தான்!

# இரண்டாம் காட்சி

பாத்திரங்கள்: முன்போல்

இடம்: வீடு. காலம்: சனிக்கிழமை

ஜானகி: விடிந்து விட்டதா சனிக் கிழமை! எண்ணே தேச்சு சாரதாவைக் குளிப்பாட்ட முந்தி இன்று ஒரு குரு க்ஷேத்திரமே ஆகி விடும்!

கோவிந்தசாமி: குரு க்ஷேத்திரம் மிகக் கர்நாடகம். இன்று ஸ்டாலின் கிராடே ஆகப்போகிறது பார்!

சுந்தரியம்மாள்: இன்று அவள் பாடு, அவள் அப்பா பாடு. நாம் பேசாம லிருப்போமடி! அவனுக்குங் கொஞ்சம் இந்தக் கஷ்டமெல்லாம் தெரியட்டும்.

கோவிந்தசாமி: சாரதா, நான் வேஷ்டி துவைக்கப் போகிறேன்.

சாரதாமணி: பாப்பாவுந் தோச்சுவேன்.

ஜானகி: அப்படி! அது தான் சரி, விடாதடீ உங்கப்பாவை!

கோவிந்தசாமி: (சிரித்த முகத்துடன்) உம், பாப்பாவும் துவை. வா, ஒஞ் சட்டையைக் கழற்றுவோம். (சட்டையைக் கழற்றி) அப்பா மாதிரி சட்டையைத் தண்ணியில் நனேச்சு, அந்த சின்னக் கல் லிருக்கே, பாப்பாக் கல் அதிலே துவை.

ஜானகி: அவள் துவைச்சு மண்ணேப் போட்டா! நீங்க வாங்கி ரெண்டு அடி அடிச்சுக் குடுங்க. குழந்தை யோடு சரியா நீங்களும் விளையாடாதீர்கள்.

**சாரதாமணி:** ஊஹூம், உம், உம், உம், உம். (குதிக்கிறாள்.)

**கோவிந்தசாமி:** அப்பா துவைக்கலே, நீயே துவை. (தலையை ஆட்டுகிறார்) உம்.

**சாரதாமணி:** (சிறிது நேரத்திற்குப் பின் சட்டையைக் காட்டி) அப்பா இங்கே பாரு! பாப்பா அல்லாத் தோச்சிருக்கேன்!

**கோவிந்தசாமி:** (சிரித்த முகத்துடன்) அடே! பாப்பா நல்லாத் துவைச்சிருக்கேயே! எங்கே?

(சட்டையைக் கையில் வாங்கி இரண்டு அடி அடித்து நீரில் அலசிக் கொடுக்கிறார். சாரதா அதை வாங்கி அவளுக்கு எட்டக்கூடிய ஒரு ஸ்டாண்டில் உலரப் போடுகிறாள்)

**கோவிந்தசாமி:** அப்பா எண்ணை தேச்சுக் குளிக்கப் போறேன்.

**சாரதாமணி:** பாப்பாவும் கூய்ப்பேன்!

**கோவிந்தசாமி:** வா, எண்ணை தேய்ப்போம்.

(சாரதா சிரித்த முகத்துடன் ஓடுகிறாள்.)

**கோவிந்தசாமி:** பாப்பாவுக்கு அப்பா தேச்சு விடட்டுமா?

**சாரதாமணி:** ஊஹூம், பாப்பா தேப்பேன்.

**கோவிந்தசாமி:** சிந்தாமத் தேய்க்கணும்!

**சாரதாமணி:** (களி பொங்கும் முகத்துடன்) உம்!

(எண்ணையை அதிகமாகச் சிந்துகிறாள்)

**கோவிந்தசாமி:** இங்கே பார். அப்பாவைப் பார். அப்பா எப்படி எண்ணை சிந்தாமத் தேய்க்கிறேன் பார்.

**சாரதாமணி:** திந்தாமத் தேய்க்கிறேன். சேரியா அப்பா!

**கோவிந்தசாமி:** (சிறிது நேரத்திற்குப் பின்) தேச்சாச்சா? வா, சீயக்காய் தேய்த்துக் குளிப்போம்.

**சாரதாமணி:** பாப்பா தேப்பேன்.

**கோவிந்தசாமி:** உம், வா!

*(சாரதா சிரித்துக் கொண்டு ஓடுகிருள். ஜானகி ஆச்சரியத்துடன் பார்க்கிருள். அன்றைய எண்ணெ ஸ்நானம் இத்தாலியின் எதிர்ப்பைப் போலாகி விடும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை போலும்!)*

# மூன்றும் காட்சி

பாத்திரங்கள்: முன்போல்

**இடம்:** சமையலறை | **காலம்:** அன்று காலை சுமார் 11 மணி

**கோவிந்தசாமி:** (சுந்தரியம்மாளையும், ஜானகியையும் பார்த்து) நானும், சாரதாவும் இன்று சமையல் செய்யப்போகிறோம். நீங்கள் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியது.

**சுந்தரி, ஜானகி:** ஓ! பேஷாய் நடக்கட்டும். அவளோடு நாங்கள் படுகிற கஷ்டத்தை அனுபவித்துப் பார்த்தால் தானே தெரியும்!

(சமையல் நடக்கிறது)

**கோவிந்தசாமி:** (சாரதாவைப் பார்த்து) பாப்பா இன்று எத்தனை வேலை செய்து இருக்கிறாள்; தேவலையே! பாப்பா, நல்ல பிள்ளை! இன்றைக்குச் சமையலில் பாதிச் சமையல் பாப்பாவுடையதுதான். சாரதா, அடுப்பைப் பார், விறகில்லையே!

**சாரதாமணி:** பாப்பா வேகு எத்து வாரேன், சேரியா?

**கோவிந்தசாமி:** (சிரித்த முகத்துடன்) உம்.

**சுந்தரியம்மாள்:** வெறகெல்லாம் அவளை எடுக்கச் சொல்லாதடப்பா. நான் எடுத்துக்கிட்டு வாரேன். கண்ணிலே காதிலே குத்திக் குருடாச் செவிடாப் போயிட்டா அப்புறம் அவளை எவன் கல்யாணம் பண்ணுவான்?

**கோவிந்தசாமி :** அவளைப் பற்றி எனக்குக் கவலை யில்லை. நீ கொஞ்சம் உஷாராய் எடம்மா ?

**சாரதாமணி :** (இரண்டு விறகுகளை இரண்டு கைகளிலும் பிடித்துக் கீழே 'பற பற'வென இழுத்துக் கொண்டு, அந்தச் சப்தத்தைக் கேட்டு அளவு கடந்த மகிழ்ச்சியுடன்) இந்தாப்பா வேகு !

**சுந்தரியம்மாள் :** நாசமாய்ப் போக! ஏண்டி ஜானகி' வெறகை இப்படியா அடுக்குவே? வெறகுஅடுக்கி யிருக்கிற லக்ஷணத்தைப் பார்க்கலே! நல்லவேளை. கண்ணு தப்பிச்சுது! இந்த யாதிரி வெறகு அடுக்கி யிருக்கிறதை நான் இங்கே தான் பார்க்கிறேனம்மா! அவனைக் கூப்பிடு. நெத்தியிலே யிருந்து 'களகள'ண்ணு ரத்தம் வடியிது !

**கோவிந்தசாமி :** (அவசரமாய் வந்து சிரித்துக் கொண்டே) ஒரு வேலையும் ஓட விடமாட்டேன் என்கிறீர்களே ! ஒங்களுக்குச் .சிகிச்சை பண்றதுக்கே நேரம் சரியாய்ப் போகும் போலிருக்கே !

**சாரதாமணி :** (பாட்டி கொடுக்குந் தொல்லையைச் சகிக்க முடியாதவள் போல் முகத்தை வைத்துக்கொண்டு) ஆமச் சனியன் !

(சுந்தரியம்மாளுக்குச் சிகிச்சைசெய்யப்பட்டு முடிகிறது. அடுப்பின் மீதிருந்த சாம்பார் பொங்குகிறதென்று, அதை இறக்குவதற்கு ஜானகி சமையலறைக்கு ஓடுகிருள்.)

**கோவிந்தசாமி :** ஐயய்யோ ! ஐயய்யோ ! நீ போட்றீவே ! போட்றீவே! தொடாதே! கையைச் சுட்டுக்கிறப் போறே ! நான் வாறேன் ! (ஓடுகிருர்)

ஜானகி: இப்படியா! ஒரு வேலை செய்யும்போது இப்படிக் கத்திக்கிட்டுப் பின்னுலே ஓடி வந்தா, என்ன வேலைதான் ஓடும்? அவ்வளவு சாம்பாரும் வீணாப்போச்சு. சட்டி வேறே ஒடஞ்சு போச்சு! நல்ல வேளை காலிலே விழுந்து கொப்பளிக்கத் தெரிஞ்சுது!

கோவிந்தசாமி: நேற்று கண்ணாடி டம்ளரைச் சாரதா எடுக்கப்போன போது, நீங்கள் ரெண்டு பேரும் இப்படித்தானே அவள் பின்னுல் ஓடினீர்கள். அதனுல்தான் அவள் அதை உடைத்துவிட்டாள்!

சாரதாமணி: (அம்மாளைப் பார்த்து) நீ வேரே பத்திரே, பாத்தி வேறே பத்திரா! என்ன வேலை ஒடிது!

ஜானகி: (புன் சிரிப்புடன்) போடி நாயே! இந்தச் சின்ன நாயிட்ட இண்ணைக்கிப் பேச்சு கேக்கணுமின்னிருக்கிது!

(கோவிந்தசாமி சிரிக்கிருர்.)

# நான்காம் காட்சி

பாத்திரங்கள்: முன்போல்

காலம்: அதே நாள் மத்தியானம். சுமார் ஒரு மணி.

இடம்: படுக்கை யறை.

[சாப்பாட்டிற்குப் பின் சாரதாவும், கோவிந்தசாமியும் படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கிறார்கள்.]

**கோவிந்தசாமி:** சாரதா, ஒரு பாட்டுச் சொல்லு பார்ப்போம்.

**சாரதாமணி:** என்னப் பாத்துச் சொல்ல அப்பா?

**கோவிந்தசாமி:** 'நிலா நிலா'ச் சொல்லு.

**சாரதாமணி:** அதா? நெலா நெலா எங்கே போறே? மலைக்குப் போறேன். மலைக்கு ஏக்கு? மரம் வெத்த. மரம் ஏக்கு? செப்புச் செய்ய. உம் ம் ம் ம் ம் அப்புறம்?

**கோவிந்தசாமி:** செப்பு எதற்கு?

**சாரதாமணி:** காச்சுப் போட. காச்சு ஏக்கு? மாடு வாங்க. மாடு ஏக்கு? பால் கயக்க. பால் ஏக்கு? நீ குயிக்க!

**கோவிந்தசாமி:** பேஷ்! பாப்பா நல்ல பிள்ளை! பாட்டு நல்லாச் சொல்றியே!

**சாரதாமணி:** நீ ஒரு பாத்துச் சொல்லு அப்பா!

**கோவிந்தசாமி:** என்ன பாட்டு?

சாரதாமணி: சின்னஞ் சிறு 'குயிவி போல'ச் சொல்லு!

கோவிந்தசாமி: சின்னஞ் சிறு குருவி போல...நீயும் சொல்லு.

சாரதாமணி: சின்னஞ் சிறு குயிவி போல...

கோவிந்தசாமி: நீ திரிந்து பறந்து வா பாப்பா.

சாரதாமணி: நீ தியிந்து பாந்து வா பாப்பா.

கோவிந்தசாமி: வன்னப் பறவைகளைக் கண்டு.

சாரதாமணி: வன்னப் பறவைகளைக் கந்து.

கோவிந்தசாமி: நீ மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா.

சாரதாமணி: நீ மயதில் மால்ச்சி கொள்ளு பாப்பா. இன்னொரு பாத்துச் சொல்லப்பா.

கோவிந்தசாமி: என்ன சொல்ல.

சாரதாமணி: செந்தமிள் சொல்லப்பா.

கோவிந்தசாமி: செந்தமிழ் நாடெனும் போதினிலே.

சாரதாமணி: செந்தமி நாதென்னும் போயினிலே.
(இந்தப் பாட்டின் மத்தியிலேயே குழந்தை தூங்கி விடுகிறது)

கோவிந்தசாமி: ஜானகி! ஜானகி!

ஜானகி: ஏன்?
(ஜானகியும் அவளுக்குப் பின்னால் சுந்தரி அம்மாளும் வருகிறார்கள்.)

கோவிந்தசாமி: குழந்தை தூங்கி விட்டது!

ஜானகி: ஆச்சரியத்துடன் தூங்கி விட்டதா? முன்பெல்லாம் தூங்குகிறதுக்கு என்ன பாடு படுத்துந் தெரியுமா?

சுந்தரியம்மாள்: இண்ணைக்கி இத்தனை வேலை செய் திருக்கில்ல! அந்த அலுப்பு!

ஜானகி: ஆம், குழந்தை இத்தனை வேலையா செய்யும்? கிணற்றிலேயிருந்து தண்ணி கொண்டு வந்தா, அவள் சட்டையைத் தொவச்சா, அதைக் காயப் போட்டா, தானே எண்ணை தேச்சா, முழுகினா, தானே தலையைத் துவட்டிணும்னு தொவட் டினா, அப்புறம் சமையலுக்குத்தான் எத்தனை உதவி பண்ணினா, ஒரு சிறு கிண்ணத்திலே அவ வேறே புளிக் கரச்சா, உப்பு எடுத்துக்கொடுத்தா, மொளகாய் எடுத்துக் கொடுத்தா, அடுப்பு ஊதினா, பருப்பைக் கிண்டி விட்டா! எத்தனை வேலை! இன்று அவள் செய்த வேலையை எண்ணத் தொலையாது!

சுந்தரியம்மாள்: ரெண்டரை வயசுக் கொழந்தே இத்தனை வேலை செய்ய எங்கையாவது பாத்தமாடி! (மூக்கில் விரலை வைக்கிருள்.)

ஜானகி: அதுதான் போகட்டும், சொல்லிவச்சாப்பிலே நீங்க ஏன் நெத்தியைக் காயம் பண்ணிக்கிட்டிய, நான் ஏன் சாம்பார் சட்டியை ஒடைச்சேன்?

கோவிந்தசாமி: இப்பச் சொல், அது பிள்ளையா பூதமா?

ஜானகி: (சிரித்துக் கொண்டு) பூதந்தான், கழுதை! பிள்ளை இத்தனை வேலை செய்யக் கண்டிருக் கோமா?

கோவிந்தசாமி: வேலை சம்பந்தப்பட்ட மட்டில் ஒவ்வொரு குழந்தையும் ஒரு **பூதந்தான்! இக் குழந்தை பூதத்தினிடம்** வேலை வாங்குவதற்கு ஓர்

அலாவுதீனே அல்லது மந்திரவாதியோ தான் தேவை. இந்த அலாவுதீனுக்குக் குழந்தையின் மனோ தத்துவந் தெரிந்திருக்க வேண்டும். அத்துடன் சிறிது பொறுமையும் வேண்டும். ஏதோ ஒரு பூதம் தன் எஜமானன் தனக்குப் போதிய வேலை கொடுக்கா விட்டால், அவனையே கொன்று விடுமாம். குழந்தைகளும் ஏறக்குறைய அதைப் போலத்தான். அவர்களிடம் அளவற்ற செயலாற்றும் சக்தி இருக்கிறது. அதைச் சரிவரப் பயன் படுத்திக் கொள்ளத் தெரியாதவர்களைக் குழந்தைகள் துன்பப் படுத்தவே செய்யும்!

# கண்ணாடி வீடு

## பாத்திரங்கள்

ராமச்சந்திரன் : பூகோள உபாத்தியாயர்

ரங்கநாதன் : கணித ஆசிரியர்

சகுந்தலா : ரங்கநாதனின் மனைவி

டாக்டர்

# முதற் காட்சி

[ஓட்டு வீடு. வாசலிலிருந்து நுழைந்ததும் ஒரு முற்றம். முற்றத்தின் இடது புறத்தில் நாற்காலி போல் நான்கு கால்களையுடைய ஒரு சட்டம். அதன் மீது ஒரு தேக்கம் பலகை. அதில் பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்கள் சிலவும், அவைகளுடன் கதைப் புத்தகங்கள் சிலவும் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. சட்டத்தின் நீளத்துக்கு அதிகமாகவே புத்தகங்கள் இருப்பதால், அவை கீழே விழாமல் அடைத்துக் கொண்டிருக்கும் பலகை, சட்டத்திற்கப்பால் நீண்டு கொண்டிருக்கிறது. அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் புத்தகங்கள் மீதும், சில புத்தகங்கள் போடப்பட்டிருக்கின்றன. முன்னால் ஒரு சாய்வு நாற்காலி. அதில் இருக்கும் ரெட்டு சற்று அதிகமாகவே அழுக்கடைந்திருக்கிறது. அதற்குச் சமீபத்தில் ஒரு படுக்கையில் ராமச்சந்திரன் படுத்திருக்கிறார்.]

**ராமச்சந்திரன்:** வியாதிகளில் எத்தனை வகைதான் உண்டோ, தெரியவில்லை. அதில் நமக்கு வந்திருப்பது ஒரு விநோத வகையைச் சேர்ந்ததாய் இருக்கிறது.

(ரங்கநாதன் புன் சிரிப்புடன் உள்ளே நுழைகிறார். ராமச்சந்திரன் உட்காரச் சொல்லவே, சாய்வு நாற்காலியில் அமர்கிறார்.)

**ரங்கநாதன்:** என்ன ஐயா! படுத்துக் கொண்டு விட்டீர்கள்? உடம்புக்கு என்ன செய்கிறது?

**ராமச்சந்திரன்:** (முகத்தில் கவலைக் குறிகளுடன்) மறுபடியும் பழைய தொல்லைதான்!

**ரங்கநாதன்:** ஏன், என்ன செய்கிறது?

**ராமச்சந்திரன்:** (சலிப்புடன்)வயிற்றுக் கோளாறு தான்.

**ரங்கநாதன்:** வயிற்றுக் கோளாறு என்ருல், என்ன தான் செய்கிறது?

**ராமச்சந்திரன்:** பசியில்லை.

**ரங்கநாதன்:** (சிரித்துக்கொண்டு) இதற்கு யாராவது கவலைப் படுவதுண்டா? உத்தியோகம் செய்ய வேண்டிய கவலை நீங்கிற்று! பசிப் பிணியைத் தீர்க்கத்தானேயா, இந்த உத்தியோக மெல்லாம். அது இல்லையென்ருல், பேசாமல் இருந்த இடத்தில் இருந்து ஈசுவரத் தியானம் செய்து கொண்டிருக்கலாமே! எனக்கு இந்த மாதிரி நோய் வர மாட்டேன் என்கிறதே!

**ராமச்சந்திரன்:** தலையெல்லாம் கொதிப்பது போல் தோன்றுகிறது!

**ரங்கநாதன்:** இந்த விநோதத்தைப் பாருங்கள்! அடி வயிற்றில் கோளாறு வர, உடனே அது உச்சந் தலையைப் பிடிக்கிறது பாரும்! என்னேயா அதிசயம்!

**ராமச்சந்திரன்:** உங்களுக்கு இதெல்லாம் இப்பொழுது கேலியாகத்தான் இருக்கும். தனக்கு வந்தால் தான் ஒவ்வொருவருக்கும் அதனதன் கஷ்டங்கள் தெரியும்.

**ரங்கநாதன்:** உம், அப்புறம் என்ன செய்கிறது?

**ராமச்சந்திரன்:** பித்தத்திஞல் உண்டாகும் கோளாறுகள் எல்லாம் இருக்கத்தான் செய்கிறது.

ரங்கநாதன்: பித்தமாவது வாதமாவது! எல்லாம் மதி மயக்கந்தான்! வேறொன்றுமில்லை.

ராமச்சந்திரன்: நீங்கள் இப்போது அப்படித்தான் சொல்லுவீர்கள்.

ரங்கநாதன்: அமாவாசை, பௌர்ணமிகளில் இந்தத் தொல்லை அதிகமாய் இருப்பதாகச் சொல்வீர்களே. உங்கள் விஷயமெல்லாம் வேடிக்கையாகத்தான் இருக்கிறது. பௌர்ணமி வருவதையும், அமாவாசை வருவதையும் உங்கள் உடம்பு எப்படித்தான் அறிந்து கொள்கிறதோ, தெரியவில்லை!

ராமச்சந்திரன்: நேற்றுப் பௌர்ணமிதானே!

ரங்கநாதன்: இந்த முட்டாள்த் தனத்தை எல்லாம் என்னுல் சகித்துக் கொண்டிருக்கவே முடியவில்லை. நான் சொல்லுகிறேனே, எல்லாம் மனக் கோளாறுதான்!

ராமச்சந்திரன்: காலையில் எழுந்திருந்ததும் தினந் தோறும் பித்தமாய் வாந்தி எடுக்கிறேன். சிற்சில சமயங்களில் தலை சுற்றுகிறது. இதை எல்லாம் எப்படி மனக் கோளாறு என்று சொல்வது?

ரங்கநாதன்: என்ன ஆச்சரியம் பாருங்கள்! நீங்கள் பூகோள ஆசிரியர் அல்லவா? 'பூமி சுற்றுகிறது! பூமி சுற்றுகிறது!' என்று சொல்லிக் கொடுத்த தன்பயனுய், இப்பொழுது உங்கள் தலையே சுற்ற ஆரம்பித்துவிட்டது போலும்! (உரத்துச் சிரிக்கிருர்)

**ராமச்சந்திரன்:** உங்களுக்கு எல்லாம் வேடிக்கையாயிருக்கிறது! என் கஷ்டங்களை இருந்திருந்து எல்லாம் உங்களிடம் சொல்கிறேனே!

**ரங்கநாதன்:** (சிரித்துக் கொண்டே) அது போகட்டும். பூமி மேற்கிலிருந்து கிழக்கு முகமாகச் சுற்றுகிறதாம். உங்கள் தலை எந்த முகமாய்ச் சுற்றுகிறது?

**ராமச்சந்திரன்:** (புன் சிரிப்புடன்) அதிலும் ஓர் அதிசயத்தைப் பாருங்கள்! வலது புறம் திரும்பிப் படுத்தால், தலை சுற்றுகிறது; இடது புறம் படுத்தால், சுற்றுவதில்லை.

**ரங்கநாதன்:** என்ன வேகத்துடன் சுற்றுகிறதோ? பூமி மணிக்கு 72,000 மைல் வேகத்தில் சுற்றுவதாகச் சொல்வீரே!

**ராமச்சந்திரன்:** உங்களுக்கு எல்லாமே வேடிக்கையாகத்தான் இருக்கிறது.

**ரங்கநாதன்:** பௌர்ணமி, அமாவாசை உபவாச மிருப்பீர்களே! அது என்ன ஆயிற்று?

**ராமச்சந்திரன்:** இருந்து கொண்டுதான் இருக்கிறேன்.

**ரங்கநாதன்:** ஒரு லேகியம் சாப்பிடுவீர்களே. இப்போது கிடையாதோ?

**ராமச்சந்திரன்:** சாப்பிட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். அதில் எல்லாம் கொஞ்சம் குணம் தெரியத்தான் செய்கிறது.

**ரங்கநாதன்:** தலை சுற்றுகிறது, வாந்தி எடுக்கிறது, வயிற்றுக் கோளாறு என்பதெல்லாம் வெறும் பிரமைதான். உங்களுக்கு ஒரு வியாதியுமில்லை

அந்த லேகிய டப்பாவைத் தூக்கிக் குப்பையில் எறிந்து விடுங்கள். உபவாசத்தை நிறுத்திவிட வேண்டும். எனக்கு இம்மாதிரி வியாதி வந்தால் என்ன செய்வேன் தெரியுமா? நன்ருய்ச் சாப்பிடுவேன்; ஓடுவேன்; ஆடுவேன். நான் சொல்லுகிறேன் கேளுங்கள். நன்ருய்த் தேகப் பயிற்சி செய்யுங்கள்; அப்புறம் ஒரு நோயும் அணுகாது. (திடீரென்று கடிகாரத்தைப் பார்க்கிருர்.) பள்ளிக்கூடத்திற்கு நேரம் ஆகிவிட்டது. உங்களுக்கு இரண்டு நாளைக்கு ரஜாவாக்கும். சரி, போய் வருகிறேன். (செல்கிருர்.)

# இரண்டாம் காட்சி

---

[காரை மச்சுப் போட்ட வீடு. வீட்டு முற்றத்தில் ஓர் அழகிய கண்ணாடி பீரோவில் புத்தகங்கள் நிறைய அடுக்கப் பட்டிருக்கின்றன. தமிழ், ஆங்கில இலக்கியங்களும், கணிதம், கலை சம்பந்தமான நூல்களும் காட்சி யளிக்கின்றன. மேஜையைச் சுற்றிலும் நான்கைந்து நாற்காலிகள் போடப்பட்டிருக்கின்றன. மேஜையின் மீது சில நோட்டுப் புத்தகங்கள் விரித்தும், மூடியும், மடங்கியும், கிடப்பது, அவைகளை உபயோகிப்பவரைப்பற்றி ஏதோ சொல்லுவது போல் தோன்றுகிறது. புத்தகங்களின் மீதும், மேஜையின் மீதும் தூசி படிந்திருக்கிறது. **ரங்கநாதன்** படுக்கையில் படுத்து நிலை கொள்ளாமல் புரண்டு கொண்டிருக்கிறார். திடீர் திடீரென்று அவருக்குக் கோபம் வருகிறது. யாராவது எதுவும் கேட்டால் சீறி விழுகிறார்.]

**ரங்கநாதன்:** இத்தத் தரித்திரம் பிடித்த தொழில்களுக்கு ஒரே முழுக்காய் முழுகிவிட வேண்டும். அதனால்தான் இந்தத் தொல்லை எல்லாம். வாத்தியார் உத்தியோகமும் அப்படித்தான். எழுதும் தொழிலும் அப்படியே. இரண்டும் அஷ்ட தரித்திரம்! வேறு எந்த வியாதியானாலும் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால், இதைப் பொறுக்க முடியாது. ஐயோ!

(புத்தகங்களையும் நோட்டுக்களையும் வீசி எறிந்து விட்டு, மீண்டும் வந்து படுத்துக் கொள்கிறார்.)

சகுந்தலா! அடீ சகுந்தலா!, ஆ ஆ! டாக்டருக்கு ஆள் அனுப்பச் சொன்னேனே! அனுப்பினையா இல்லையா!

**சகுந்தலா:** அனுப்பி யிருக்கிறேன்.

**ரங்கநாதன்:** ஏன் இன்னும் வரவில்லை?

**சகுந்தலா:** (மௌனம்)

**ரங்கநாதன்:** ஏன் இன்னும் வரவில்லை யென்று கேட்கிறேன்! (**உரத்த சப்தத்தில்**) காது கேட்கவில்லையா?

**சகுந்தலா:** (ரங்கநாதனைச் சமாதானப்படுத்தி) இப்போது வந்து விடுவார். வீணில் மனதை அலட்டிக் கொள்ளாதீர்கள். பேசாமல் படுத்திருங்கள்.

**ரங்கநாதன்:** வேறு எந்த வியாதியையும் பொறுத்துக் கொள்வேன். ஆனால் இதை என்னால் அரைக் கணமும் பொறுக்க முடியாது.

(**யாரோ வரும் காலடிச் சப்தம் கேட்கிறது.**)

**ரங்கநாதன்:** (தனக்குள்) இதோ டாக்டர் வந்து விட்டார். ஆனால், அவரிடம் நான் இதை என்ன என்று சொல்வேன்! தெரியவில்லையே!

(**ராமச்சந்திரன் முற்றத்தில் நுழைகிறார். ரங்கநாதன் நிராசையுடனும், முகத்தில் வேதனைக் குறிகளுடனும் படுக்கையில் புரளுகிறார்.**)

**ராமச்சந்திரன்:** (முகத்தில் கவலைக் குறிகளுடன்) உடம்புக்குச் சௌகரிய மில்லையாமே. இப்பொழுதுதான் கமலா சொன்னாள்: 'ரொம்பக் கஷ்டப் படுகிறார்.

போய்ப் பார்த்து விட்டு 'வாருங்கள்' என்றாள். ஏன் என்ன செய்கிறது?

**ரங்கநாதன்:** என்ன வெல்லாமோ செய்கிறது! ஒன்று இரண்டா சொல்வதற்கு! உடம்பெல்லாம் என்னமோ செய்கிறது!

**ராமச்சந்திரன்:** என்ன செய்கிறதென்று சொன்னால், கைப்பக்குவம் ஏதாவது செய்து பார்க்கலாம்; அதற்காகத்தான் கேட்டேன்.

**ரங்கநாதன்:** கைப் பக்குவத்தில் எல்லாம் இது கட்டுப் படுமா? டாக்டரைக் கூட்டி வரச் சொல்லி யிருக்கிறேன். (வேதனையுடன் புரண்டு படுக்கிறார்.) ஐயோ!

**ராமச்சந்திரன்:** வேதனை பொறுக்க முடியவில்லை போலி ருக்கிறதே! காய்ச்சல் அடிக்கிறதோ?

(உடம்பைத் தொட்டுப் பார்க்கிறார்.)

**ரங்கநாதன்:** காய்ச்சலாயிருந்தால், இப்படிக் கஷ்டப் பட மாட்டேன்!

**ராமச்சந்திரன்:** பின் என்னதான் செய்கிறது? சொல் லுங்களேன்?

**ரங்கநாதன்:** (கோபத்துடன்) வியாதித் தொல்லை ஒரு புறமிருக்க, உங்கள் தொல்லையல்லவா பெருந் தொல்லையாய் இருக்கிறது! நீங்கள் என்ன டாக்டரா என்ன? உங்களிடமெல்லாம் சொல்லி என்ன பிரயோஜனம்?

(டாக்டர் நுழைகிறார்.)

**ரங்கநாதன்:** வாருங்கள்!

(டாக்டர் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு படுக்கைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து நெஞ்சு, முதுகு எல்லாம் 'ஸ்டெதஸ்கோப்'பை வைத்துப் பார்க்கிறார். நாக்கை நீட்டச் சொல்கிறார்.)

**டாக்டர்:** உடம்புக்கு என்ன செய்கிறது?

**ரங்கநாதன்:** உடம்பெல்லாம் என்னவோ செய்கிறது! என்ன செய்கிறதென்றே தெரியவில்லை.

**டாக்டர்:** உம். (நோயாளியைக் கூர்ந்து கவனிக்கிறார்.)

**ரங்கநாதன்:** எடுத்ததற்கெல்லாம் கோபம் வருகிறது.

**டாக்டர்:** (புன் சிரிப்புடன்) அதற்கு என்றால் ஒரு பிரயோசனமுமிருக்காதென்று நினைக்கிறேன். கோபம் பெரிய வியாதிதான். ஆனால் அது மருந்து கொடுத்துக் குணப்படுத்தக் கூடியதல்ல!

**ரங்கநாதன்:** ஒரு நிலையில் இருப்புக்கொள்ள வில்லை. மனது சஞ்சலப் படுகிறது.

**டாக்டர்:** (நெற்றியில் கை வைத்துப் பார்க்கிறார்.) நெற்றி கொஞ்சம் சுடுகிறது.

**ரங்கநாதன்:** ஆம், தலை கொதிக்கிறாப் போலிருக்கிறது.

**டாக்டர்:** நாக்கை நீட்டுங்கள்.

(ரங்கநாதன் மறுபடியும் நாக்கை நீட்டுகிறார். டாக்டர் மீண்டும் நாக்கைப் பார்க்கிறார்.)

**டாக்டர்:** வயிற்றுக் கனம் இல்லாதிருக்கிறதா?

**ரங்கநாதன்:** கொஞ்சம் அஜீர்ணம்தான். பித்தமாய் வாந்தி எடுத்தேன்.

**டாக்டர்:** தலை சுற்றுகிறதோ?

**ரங்கநாதன்:** ஆம், உட்கார்ந்திருக்கும் போதும், நடக்கும் போதும், சில சமயங்களில் சுற்றுகிறது. வலதுபுறம் திரும்பிப் படுத்தாலும், சில சமயங்களில் சுற்றுகிறது.

**டாக்டர்:** பசி இருக்கிறதா?

**ரங்கநாதன்:** கொஞ்சம் மட்டுத்தான்.

**டாக்டர்:** உங்களுக்கு ஒன்றுமில்லை. பயப்பட வேண்டாம். மனக் கலக்கம் வேண்டாம். பீதியும் வேண்டாம். இப்போது ஒரு மருந்து கொடுக்கிறேன். தற்காலிக குணம் இருக்கும். பின்னுல் ஒரு லேகியம் கொடுக்கிறேன். ஒரு மாதம் சாப்பிடுங்கள். நல்ல குணம் தரும்.

**ரங்கநாதன்:** லேகியமா?

**டாக்டர்:** ஆமாம், எனக்கு ஆயுர் வேதத்திலும் அதிக நம்பிக்கை உண்டு. இந்தப் பௌர்ணமியிலிருந்து அடுத்த பௌர்ணமி வரைக்கும் சாப்பிட்டால் போதும்.

**ரங்கநாதன்:** பௌர்ணமியா?

**டாக்டர்:** ஆம், நாளைக்குப் பௌர்ணமி யல்லவா? நீங்கள் லேகியம் சாப்பிடுவதுடன், நன்ருய்த் தேகப் பயிற்சி செய்ய வேண்டும். நல்ல பசியிருந்தால் மட்டும் சாப்பிட வேண்டும். இல்லையானுல் உபவாசம் இருப்பது நலம். சரி, போய் மருந்தை அனுப்புகிறேன். பயப்படாதீர்கள். எல்லாம் குணமாகி விடும். (போகிருர்.)

ராமச்சந்திரன்: (புன்சிரிப்புடன்) நான் சொல்கிறேன், கேளுங்கள். நெற்றி கொதிக்கிறது, தலை சுற்றுகிறது, வாந்தி எடுக்கிறது என்பதெல்லாம் சுத்தப் பிரமை. உங்களுக்கு ஒரு வியாதியு மில்லை. இந்த டாக்டர் சொல்லுகிறார் என்று கேட்காதீர்கள். அவர் ஏதாவது லேகியம் கொடுத்தால், பேசாமல் அதைக் குப்பையில் எறிந்து விடுங்கள். உபவாசம் சிபவாசம் என்பதெல்லாம் சுத்தப் பைத்தியக்காரத்தனம். எனக்கு இந்த மாதிரி வியாதி வந்தால், நான் என்ன செய்வேன் தெரியுமோ? நன்றாய்ச் சாப்பிடுவேன்! ஓடுவேன்! ஆடுவேன்! இப்படிப் படுத்திருக்க மாட்டேன்.

ரங்கநாதன்: (பீதி நீங்கிய வராய்ச் சிறிது உற்சாகத்துடன்) கண்ணாடி வீட்டில் இருப்பவர்கள் பிறர்மீது கல்லெறியக் கூடாது!

ராமச்சந்திரன்: (எழுந்திருந்து சென்றுகொண்டே புன் சிரிப்புடன்) அது உடைந்த வீடா யிருந்தால்!

[திரை]

# க ரு ணை

## பாத்திரங்கள்

மிராசுதார்

வசந்தகுமாரி : அவருடைய மனைவி

மீனாக்ஷி : வசந்தகுமாரியின் தாயார்

வேலன் : வீட்டு வேலைக்காரன்

பிச்சைக்காரி

[ஓர் மாடி வீடு. மாலை சுமார் ஐந்து மணி. மிராசுதாருடைய நாகரீக மனைவி வசந்த குமாரியும் அவள் தாயார் மீனாக்ஷியம்மாளும் சிற்றுண்டி அருந்திய பின் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

**வசந்தகுமாரி:** ஜனங்கள் படுங் கஷ்டத்தைக் கேட்டால் சகிக்க முடியலை யம்மா! ஒவ்வொரு நாளும் அவர் வந்து சொல்வதைக் கேட்டால் நெஞ்சைப் பிளக்குது!

**மீனாக்ஷி:** ஆமாம் வசந்தா, நேத்து உன் வீட்டுக்காரர் என்னமோ சொல்லிக்கிட்டிருந்தாரே, என்ன சொன்னாரிண்ணு கேக்க நெனச்சேன்; அப்புறம் மறந்திட்டேன். என்னம்மா சொன்னார்?

**வசந்தகுமாரி:** கல்கத்தாண்ணு கேள்விப்பட்டிருக்கேல்லம்மா. அந்த ஊரிலே பெருவாரியா ஜனங்கள் பட்டினி கிடந்து சாகிறதுகளாம், அம்மா.

**மீனாக்ஷி:** என்னடி அநியாயம்! சண்டையிண்ணு நடந்தா இந்தக் காலத்தில் சனங்கள் குண்டு விழுந்துதான் சாகுமிண்ணு கேள்விப்பட்டிருக்கிறோம். பட்டினி கிடந்து ஏண்டி சாகணும்?

**வசந்தகுமாரி:** அதுதான் கலிகாலமிண்ணு சொல்றது! அதுவும் ஒண்ணு ரெண்டா அம்மா? நூத்துக் கணக்கில் சாகிறார்களாம்!

**மீனாக்ஷி :** பாவம், அந்த ஊர் எங்கே இருக்கு?

**வசந்தகுமாரி :** இங்கிருந்து எண்ணூறு தொளாயிரம் மைலுக்கு அப்பால் இருக்காம்.

**மீனாக்ஷி :** அந்த ஊருக்குக் கிட்டமுட்ட வயல்களே கிடையாதுபோலிருக்கு. ஏன் வசந்தா, அப்படித் தானே ?

**வசந்தகுமாரி :** அதுதானம்மா வேடிக்கை. அந்த ஊரு வங்காளத்திலே இருக்குதாம். அந்த வங்காளந் தான் நம்ம நாட்டிலே ரொம்பச் செழிப்பான பாகமாம். அதை நம் நாட்டுக்குத் தானியக் களஞ்சியமிண்ணு சொல்வாங்களாம்.

**மீனாக்ஷி :** அதுக்கே இந்தப் பாடுண்ணு, நாமெல்லாம் என்ன பாடு படப் போரோமோ ?

**வசந்தகுமாரி :** அதுதானம்மா பயமா யிருக்கு. ஊரெல்லாம் ஜனங்கள் பஞ்சம் பஞ்சமிண்ணு பரதவிக்குது !

(பிச்சைக்காரி ஒருத்தி வாசலில் வந்து நின்று கத்துகிருள்.)

**பிச்சைக்காரி :** அம்மா, பெரியவீட்டு எசமாங்களே ! கொஞ்சம் பிச்சை போடுங்கம்மா !

**வசந்தகுமாரி :** ஜனங்கள் படும்பாடு சொல்லி முடியாதம்மா ! ஒருபிடி சோறு கிடைக்காமல் உயிரை விடுதுகளாம் !

**மீனாக்ஷி :** உயிரை விடாமல் பின்னே என்னடி செய்யறது! சோத்தாலடிச்ச சுவர்தானே இது!

**வசந்தகுமாரி:** ஒரு நாளைக்குச் சமையலாகக் கொஞ்ச நேரமாய் விட்டால், நாம் என்ன கஷ்டப்படு கிறோம்? அந்த ஜனங்களுடைய கஷ்டம்......... அம்மா! நெனைக்கவே பயமா யிருக்கு. அந்த மாதிரிக்கஷ்டம் நமக்கு வரப்பிடாது, கடவுளே!

**மீனாக்ஷி:** நம்ம ஊருக்கே வரப்பிடாது! வேறே யாருக் குமே வரவேண்டாம் என்று சாமியைக் கும் பிடம்மா, வசந்தா.

**பிச்சைக்காரி:** (வெளியிலிருந்து) அம்மா! கொஞ்சம் பிச்சை போடம்மா. பிள்ளைக்காரிக்கு இரங்குங்க அம்மா தாயே!

**மீனாக்ஷி:** இந்த ஒடம்பை அன்னமய கோசமிண்ணு சும்மாவா சொன்னுங்க பெரியவங்க? ஒருவேளை அன்னமில்லாட்டா இந்த உடம்பு என்ன பாடு படுது!

**வசந்தகுமாரி:** உனக்கு விஷயம் முழுவதும் சொல்ல லியே அம்மா! சொல்றதுக்கே நடுக்கமா யிருக்கு.

**பிச்சைக்காரி:** (வெளியிலிருந்து) வயித்துப் பசி பிராணன் போகுதம்மா! கொஞ்சம் பழையதிருந்தாப் போடுங்களேன். தருமசாமி!

**மீனாக்ஷி:** நாங்கள் பேசிக்கிட்டிருக்கிற விஷயமென்ன! நீ வேறே ஏண்டி தொணதொணண்ணு கத்திக் கிட்டே இருக்கிறே? பேசிக் கிட்டிருக்கிறது தெரியலே? பிச்சை கேக்கிறதுக்கு இந்த ஊரி லேயே இந்த ஒரு வீடுதான் உனக்குக் கிடைச்சு தாக்கும்?

**வசந்தகுமாரி:** கல்கத்தாக் கண்ருவியை என்னண்ணு சொல்ல முடியும் அம்மா! அவர் சொல்லக் கேக்கணும்; கல்லும் உருகும், இரும்பும் இளகும். தாய்மாரெல்லாம் குழந்தைகளைக் காப்பாத்த முடியாமல் தெருவிலே விரட்டி விடுகிருர்களாம்!

**மீனுக்ஷி:** அட பாவமே, பழிகாரிகளா! ச்! ச்! ச்! இது என்ன கொடுமை!

**பிச்சைக்காரி:** (வெளியிலிருந்து) இந்தப் பச்சைக் கொழந்தைக்காவது ஒருபிடி சோறு போடுங்கம்மா! தர்மதுரைகளே, ஏழைக்கிரங்குங்க, அம்மா!

**வசந்தகுமாரி:** நீயும் ஏண்டி இப்படித் தொல்லை பண்றே? அடுத்த வீடு, அண்டை வீடெல்லாம் அஸ்தமிச்சா போச்சு?

**மீனுக்ஷி:** இப்பிடி எந்தப் பொம்பளைக்காவது மனசு வருமாடி? நமக்குச் சோறில்லேண்ணு, நம்ம கமலத்தையும், கண்ணனையும் தெருவிலா துரத்தி விடுவோம்?

**வசந்தகுமாரி:** இன்னும் கேளம்மா. வயது வந்த பெற்ருேர்களை எல்லாம் பிள்ளைகள் கைவிட்டு விட்டார்களாம். மனைவிமாரைக் கணவன்மார் துரத்தி விடுகிருர்களாம். சகோதர, சகோதரிகளை யெல்லாம் கைவிட்டு விடுகிருர்களாம். குடும்பமெல்லாம் சீரழிந்து கிடக்கிறதாம்!

**மீனுக்ஷி:** என்னடி, தாது வருஷப் பஞ்சக் கதை சொல்வது போல் சொல்றே! இப்படி எங்காவது நடக்குமா?

**வசந்தகுமாரி:** நம் கண் முன்னாலே, நம்ம காலத்திலேயே நடக்கிறதம்மா. தினந்தோறும் பத்திரிகையிலே படிக்கிறோமே!

**பிச்சைக்காரி:** (வெளியிலிருந்து) ஏழை க்கிரங்குவார் ஒருத்தரு மில்லையா சாமீ? வீடு வீடா அலஞ்சுட்டேனே! ஒருத்தராவது ஒரு பிடி சோறு போட மாட்டேங்கிறாங்களே சாமி! அம்மா, தாயே! கொஞ்சம் பழைய சோத்துத் தண்ணியாவது ஊத்துங்களேன்!

**வசந்தகுமாரி:** பேசாமப் போறியா, நாயை ஏவி விடட்டுமா?... அம்மா இன்னொரு கதையைச் சொல்ல மறந்திட்டேனே! ஐயோ! அந்தப் பரிதாபத்தை ஏன் கேக்கிறே?

**மீனாக்ஷி:** சொல்லு, சொல்லு, அதுவும் சொல்லு. அப்பறமும் சொல்லு. ஈசனே! எம்பெருமானே!

**வசந்தகுமாரி:** ஒரு பையன் - பாவம் - எத்தனை நாள் பட்டினி கிடந்தானோ? சாமிக்குத்தான் தெரியும். ஒரு வீட்டிலே எச்சிலை போட்டார்களாம். அதை எடுத்து அந்தப் பையன் ஆவலாச் சாப்பிடப் போனானும். அந்தச் சமயம் அங்கே ஒரு நாய் வந்துதாம்!

**மீனாக்ஷி:** ச்சூ, பாவம், அது எத்தனை நாள் பட்டினியோ!

**வசந்தகுமாரி:** பையனுக்கும் நாய்க்கும் அந்த எச்சிலைக்காகச் சண்டை நடந்ததாம். நாய் தான் ஜெயித்தது; பையனுக்கு நல்ல காயமாம். இப்போ ஆஸ்பத்திரியில் கிடக்கிறானும்!

**பிச்சைக்காரி:** (வெளியிலிருந்து) ஏ ஊக்கித் துளிக்கஞ்சி ஊத்துங்க அம்மா! உங்களுக்குக் கோடி புண்ணியம் அம்மா!

**மீனாக்ஷி:** இந்தப் பிச்சைக்கார நாய்களே இப்படித் தான். பிடிவாதக்கார நாய்கள் இதைப்போல வேறே கிடையாது. அரைமணி நேரமா நானுஞ் சொல்லிக்கிட்டே இருக்கேன். 'தொண தொண'ண்ணு தொண்டையைக் கிழிக்கிறு! நீ சொல்றதைக்கூட கேக்கவிடமாட்டேங்கரு... ஆமாம். நீ இதை யெல்லாம் சொல்லும்போதே என் மனம் துடியாத் துடிக்குதே. அங்கேயுள்ள சனங்கள் இதை யெல்லாம் எப்படித்தான் கண்ணுலே பாத்துச் சகிச்சுக்கிட் டிருக்காங்களோ தெரியலே! அவங்க மனம் எல்லாம் கல்லா?

**வசந்தகுமாரி:** அதென்னமோ சனியன், நமக்கு அதெல்லாம் கேட்கவே பரிதாபமா யிருக்கு!

**பிச்சைக்காரி:** (வெளியிலிருந்து) சோறு தின்னு மூணு நாளாச்சம்மா! பசி மயக்கமா யிருக்கு. கொஞ்சம் பச்சைத் தண்ணியாவது ஊத்துங்களேன்!

**மீனாக்ஷி:** இந்தச் சனியன் வேறு தொல்லே!... ஏண்டி வசந்தா, அங்கே சனங்கள் இப்படிப் படாத பாடு படுதுகளே, அதுக்கு நம்ம ஒண்ணுஞ் செய்ய முடியாதாடீ?

**வசந்தகுமாரி:** ஏனம்மா முடியாது? எல்லாரும் அந்தப் பஞ்ச நிவாரணத்துக்கு இங்கே யிருந்து பணம்

அனுப்பறுங்க. ஒம் மருமகனும் அஞ்சு ரூபாய் அனுப்பி யிருக்கார். அவர் பேர்கூடப் பத்திரி கையிலே வந்துதே!

**மீனுக்ஷி:** பேர்கூடப் பத்திரிகையிலே வந்துதா? புண்ணியந்தாண்டி யம்மா, புண்ணியந்தான்! ஒன் வீட்டுக்காரருக்குக் கோடி புண்ணியம்! ஏழைக் கிரங்கிற நெஞ்சமில்ல அவர் நெஞ்சம்! நான் ரெண்டு ரூபாய் கொடுக்கிறேன்; அதையும் அங்கு அனுப்பச் சொல்லடியம்மா.

**பிச்சைக்காரி:** (வாசலிலிருந்து) அம்மா, எரக்க மில்லீங்களா ஒங்களுக்கு? பச்சைப் பிள்ளை பட்டினியா வாடு தம்மா!

(வெளியில் உலாவச் சென்றிருந்த மிராசுதார் கையில் ஒரு பிரம்பை வீசிக்கொண்டு வருகிருர்.)

**மீனுக்ஷி:** ஏ பிச்சைக்காரி! என்ன சத்தம் போட்டுக் கொண்டிருக்கே? (பிரம்பை ஓங்குகிருர்.) போ, அப் பாலே. (உள்ளே நுழைந்து உடைகளைக் கழற்றிவிட்டு நாற்காலியில் சாய்கிருர். அவருடைய நாய், வாலை ஆட்டிக் கொண்டு வருகிறது.) அடே, வேலா! நாய்க்குச் சோறு வைத்தாயாடா?

**வேலன்:** வைச்சேன் எசமான்!

**மிராசுதார்:** பின்னே ஏண்டா அதற்கு வயிறு குறைந் திருக்கிறது?

**வேலன்:** (மௌனம்)

**மிராசுதார்:** டைகருக்குப் பால் வைத்தாயா?

**வேலன்:** பூனைக்குத்தானே எசமான், கால் படி பால் வைத்தேன்.

**மிராசுதார்:** இரண்டுக்கும் கொஞ்சம் ஆட்டுக்கறி வாங்கிக் கொண்டு வாடா. (எட்டனை விட்டெறிகிறார்.)

**வசந்தகுமாரி:** (கணவனைப் பார்த்து) இன்னைக் கென்ன சமாச்சாரம்?

**மிராசுதார்:** அதை ஏன் கேட்கிறாய்? நூற்றைம்பத்தேழு பேரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்களாம். அதில் அறுபத்தெட்டுப் பேர் இறந்து விட்டார்களாம்! கொடுமை, கொடுமை!

**பிச்சைக்காரி:** (வீட்டுவாசலிலிருந்து நகர்ந்துகொண்டே) எல்லாரும் இதைப்பத்தித்தான் பேசிப் பேசிப் பரிதவிக்கிறாங்க. ஆனால் எனக்கு ஒரு பிடி சோறு போடுவாரைத்தான் ஒருத்தரையும் காணோம்! இங்கயும் ஒண்ணும் போடமாட்டாங்க. போவுலாம், என் தலைவிதி!

(வீட்டிற்குள் ஒரு குழந்தை அழுங்குரல் கேட்கிறது)

**வசந்தகுமாரி:** அம்மா! கண்ணன் அழுகிறான். ஒன்றுஞ் சாப்பிடாமல் படுத்தவன். வெகுநேரயாச்சு. பசி எடுக்கும். தூக்கம்மா!

(வெளியில் ஒரு குழந்தை வீறிட்டலறும் சத்தம் சற்றுத் தூரத்தில் கேட்கிறது. அது பிச்சைக்காரியின் குழந்தை!)

**வசந்தகுமாரி:** (திக்பிரமை பிடித்தவள்போல்) என்னம்மா செய்து கொண்டிருந்தோம்! வீண் பேச்சும் வெட்டிப் பேச்சும்! ஐயோ, அவள் குழந்தைக் காரியம்மா! அதோ பார், அவள் குழந்தை அலறுகிறது! என் குடல் பதறுகிறதே! கூப்பி

டம்மா அவளை. எங்கெங்கேயோ பஞ்சம் என்றோமே! நம் கண் முன்னுலிருப்பதையே நாம் பார்க்கவில்லையே. என்ன பேதமை! ஐயோ! கூப்பிடம்யா அவளை. அவள் குழந்தை நம் குழந்தையைப் போலில்லையா! அய்யய்யோ!

(எழுந்து ஓடுகிருள் வாசலுக்கு.)

[திரை]

# நோய் வராதா?

## பாத்திரங்கள்

**கந்தசாமி செட்டியார்:**
தாலுகா ஆபீஸ் ஹெட்கிளார்க்

**தெய்வயானை அம்மாள்:**
அவருடைய மனைவி

**வேங்கடராமய்யர்:**
தாலுகா ஆபீஸ் ஹெட்
அகௌண்டண்டு

**ராமச்சந்திர ஐயர்** } தாலுகா
**நாராயண ராவ்:** } ஆபீஸ்
குமஸ்தாக்கள்

**முதலியார்**—டைபிஸ்டு

**குமாரசாமி**—ஆபீஸ் மொச்சி
(சிற்றேவல் புரிபவன்)

# முதற் காட்சி

**இடம்:** கந்தசாமி செட்டியாருடைய வீடு

**காலம்:** காலை சுமார் எட்டரை மணி

**தெய்வயானை:** ஏன் தான் உங்களுக்கு இப்படிக் கோபம் வருதோ தெரியவில்லை!

**கந்தசாமி:** யாருக்கு, எனக்கா கோபம் வருது? (கோபத்துடன்) என்னைக் கோபக்காரன் என்று சொல்கிற எருமைகளை எல்லாம் நன்றாய் உதைக்கணும்! எனக்குக் கோபம் வருதாம்! இன்னொருதரம் அப்படிச் சொன்னால் என்ன செய்வேன், தெரியுமா? (கோபத்துடன் விழிக்கிறார்.)

**தெய்வயானை:** ஆம், கொஞ்சந்தான் வருது!

**கந்தசாமி:** எனக்கெப்ப கோபம் வந்தது? சொல்லு; பார்ப்போம்.

**தெய்வயானை:** விடிஞ்சு எந்திருச்சதும் அந்தப் பல்லுக் குச்சிக்கு என்ன ஆட்டம் ஆடினிய? அப்பா மாதிரி பல் தேய்க்கிறேன் என்று சாரதா பல்லைக் குத்திக்கிட்டிருந்தாள். அதைப் புடுங்கி அட்டாலியிலே வச்சேன். அதுக்குத்தான் இந்தச் சத்தமா, இந்தப் பேச்சா!

**கந்தசாமி:** அதைக் காணோமே என்று தேடியவுடன் நீ வந்து எடுத்துக் குடுத்திட்டா நான் ஏன் அத்தனை சத்தம் போடுறேன்?

**தெய்வயானை :** எனக்குத்தான் எல்லாம் மறந்து மறந்து தொலைஞ்சிறுது! அதுக்கு இத்தனை கோபமா வரணும்?

**கந்தசாமி :** குளிக்கிற வெந்நீர் நெகச் சூடாயிருக்கணு மிண்ணு! எத்தனை தட்வை சொல்லியிருக்கேன்? நாலாயிரத்து நானூத்தி நாப்பத்தி நாலு தடவை சொல்லியிருப்பேன்! தினந்தோறும் கொதிக்கக் கொதிக்க வெந்நீரை இறக்கி வைத்தால் என்ன செய்வது?

**தெய்வயானை :** வெந்நீரை அடுப்பிலே வச்சிட்டு எத்தனையோ வேலைகளைப் பார்த்துக் கிட்டிருக்கேன்; அது கொஞ்சம் அதிகமாகச் சுட்டிருது. அதுக்கு சமாதானமாகச் சொன்னு என்ன?

**கந்தசாமி :** ஒரு தட்வை, ரெண்டு தடவையா யிருந்தா சமாதானமாச் சொல்லலாம். தினம் இந்தப் பாட்டாயிருந்தால் என்ன பண்ணுவது? அதுதான் போகுது. சட்னிக்கு இத்தனை காரம் வேண்டாம், அதனல் கோபம் அதிகரிக்குது, உடம்புக்குங் கெடுதி என்று எத்தனை தடவை சொல்லி யிருக்கேன். அப்புறமும் நாக்குத் தெறித்துப் போகிறுப் போல் சட்னி அரச்சிருந்தால் கோபம் வருமா, வராதா? நீயே சொல்.

**தெய்வயானை :** நான் சொல்றேன், கேளுங்க. ' நீங்கள் காரத்தைக் குறைக்கக் குறைக்க உங்களுக்குக் கோபம் அதிகமாத்தான் வருது! காரம் நல்லாச் சாப்பிடுங்க, உங்களுக்குக் கோபமே வராது!

**கந்தசாமி :** அது போகட்டும். நீ இப்ப போய்ப் பாலைக் கொண்டு வா. ஆபீசுக்குப் போக நேரமாச்சு.

(தெய்வயானை ஒரு டம்ளரில் பாலைக் கொண்டு வந்து வைக்கிருள்.)

**கந்தசாமி :** (பாலைப் பார்த்து விட்டுக் கோபத்துடன்) தினந் தோறும் பாலில் கொஞ்சங் கோதுமை மா போட்டுக் காச்சு என்று எத்தனை தடவை சொல்லி யிருக்கேன். நாலாயிரத்து நானூத்தி நாப்பத்தி நாலு தடவை சொல்லி யிருப்பேன் ! ஏன் காச்சலை ?

**தெய்வயானை :** (முகத்தில் அச்சக் குறிகளுடன் மௌனம்)

**கந்தசாமி :** (கோபம் அதிகரிக்க) ஏன் காச்சலை என்று கேட்கிறேன்.

**தெய்வயானை :** (மனக் கலக்கத்துடன்) மறந்துட்டேன் !

**கந்தசாமி :** இப்படி மறந்து மறந்துதானே மனுஷனைக் கொல்றே ?

**தெய்வயானை :** பாலில் கோதுமை மா போட்டுக் காச்சாட்டா மனுஷர் செத்தா போயிடுவாக ?

**கந்தசாமி :** நீ சாக மாட்டாயடி, நீ சாக மாட்டாய் ! உனக்கு ஆண்டவன் ஆயுசைப் பலமாய் எழுதி யிருக்கான் ! நீ குடி ! குடியிதை ! நீ குடிச்சு சிரஞ்சீவியா யிருந்தாப் போதும் !

(டம்ளரை வீசிப் பாலுடன் தெய்வயானையின் மீது எறிந்து விட்டு ஆபீசுக்குக் கிளம்புகிருர்.)

**தெய்வயானை :** விடிஞ்சு எழுந்திருச்சா தினந்தோறும் இந்த இழவுதான்! இதற்கு என்று தான் விடிவோ, எப்ப விமோசனமோ! என் தலை யோடுதான் விமோசனம், அதுக்கு முன்னே எங்கே?

## இரண்டாம் காட்சி

[கந்தசாமி செட்டியார் ஆபீஸ் காம்பவுண்டுக்குள் நுழைகிருர், அதே சமயம் ராமச்சந்திர ஐயரும் அவருடன் சேர்கிருர். தூரத்தில் ஹெட் அக்கவுண்டண்டு தன் மேஜையண்டை உட்கார்ந்திருப்பது தெரிகிறது.]

**கந்தசாமி :** ஏனய்யா ராமச்சந்திரய்யரே, இந்த மனுஷனுக்குப் பெண்டாட்டி பிள்ளை ஏதாவது உண்டா, இல்லையா? ஹெட் அக்கவுண்டண்டா லக்ஷணமா பதினேரு மணிக்கு ஆபீசுக்கு வருவதை விட்டு, எல்லாருக்கும் முன்னால் எட்டு மணிக்கே வந்து உட்கார்ந்து விடுகிருனே, ஐயா! ஏன்தான் இப்படி நம்முடைய பிராணனை வாங்கருனே தெரியல்லே!

**ராமச்சந்திர ஐயர் :** அவனுக்கு ஆபீசேதான் பெண்டாட்டி, ஆபீசேதான் பிள்ளை! சீக்கிரம் வாரும், காதிலே கேட்டால் என்னமும் சொல்லித் தொலையப் போருன்.

**கந்தசாமி :** சொல்லுவானு, பாரும். நான் அங்கே போனதும் ஒரு போடு போட்டு, ஆசாமியை வீட்டிற்குக் கிளப்புகிறேன்! (ஆபீசுக்குள் நுழைந்ததும் ஹெட் அக்கவுண்டெண்டை நோக்கி) உங்கள் பிள்ளைகள் இரண்டும் கம்புங் கழியுமாய் வேஷ்டியை வரிந்து கட்டிக் கொண்டு தெருவில் சண்டைக்கு நிற்கிருன்கள். நீங்கள் இங்கே நிம்மதியா உட்கார்ந்து வேலை பார்த்துக்கொண்

டிருக்கிறீர்கள். போய் அவன்களைக் கொஞ்சம் சமாதானம் பண்ணிவிட்டு வாருங்கள், ஸார். தெருவே சிரிக்குது!

**வேங்கடராமய்யர்:** அந்தக் கழுதைகள் எப்பொழுதும அப்படித்தான். அது கிடக்கட்டும். வருஷாந்திர ஆப்காரிக் கணக்கு அனுப்ப வேண்டுமே? அதைக் கொஞ்சம் இன்று கவனியுங்கள்.

**கந்தசாமி:** வந்ததும் வராததுமாய் ஆரம்பித்து விட்டீர்களே! (தன் மேஜையண்டை செல்கிறார், அது கொஞ்சம் தூசியா யிருப்பதைக் கண்டவுடன் கோபத்துடன்) அடே மொச்சி! அடே குமாரசாமி! இங்கே வாடா!

**குமாரசாமி:** எஜமான்!

**கந்தசாமி:** ஏண்டா கழுதை, உனக்கு எத்தனை தடவை சொல்லி யிருக்கிறேன். மேஜையையும் நாற்காலியையும் தூசியில்லாமல் துடைக்க வேண்டுமென்று. இதோடு நாலாயிரத்து நானூத்தி நாப்பத்தி நாலு தட்வை சொல்லியிருப்பேன்! பார், நீ துடைத்திருக்கிற லக்ஷணத்தை!

(அவனுடைய காதைப் பிடித்து ஹெட் அக்கவுண்டண்டிடம் இழுத்துச் செல்கிறார்.)

இந்தப் பயல்களை எல்லாம் நீங்கள் கண்டிப்பதே கிடையாது. எங்களை மட்டும் அந்தக் கணக்கெங்கே, இந்தக் கணக்கெங்கே என்று துளைக்கிறீர்கள்!

**வேங்கடராமய்யர்:** ஏண்டா, அவர் குணந்தான் உனக்குத் தெரியுமே, அவர் மேஜையை நன்றாய்த்

துடைப்பதற்கு என்னடா! போடா! போய்த் துடை, போ.

**கந்தசாமி:** (இதர குமாஸ்தாக்களை நோக்கி) பாருங்கள் ஐயா! பாருங்கள்! வேலைக்காரர்களைக் கண்டிக்கும் அழகை! (தன்னுடைய இருப்பிடத்திற்குக் கந்தசாமி செட்டியார் செல்கிறார். அவருடைய மேஜையின் மீது டைப் அடித்த சில காகிதங்கள் வைக்கப் பட்டிருக்கின்றன. அவைகளில் ஒன்றை எடுத்துக் கையில் வைத்துக் கொள்கிறார்.)

**கந்தசாமி:** ஏன் ஐயா, டைபிஸ்டு! இந்தக் காகிதம் உம்மிடம் டைப் அடிக்கக் கொடுத்து எத்தனை நாட்களாகிறது? வேலை செய்கிற ஒழுங்கைப் பார்க்கலை, ஒழுங்கை!

**டைபிஸ்டு:** (முனகிக் கொண்டே) இவர் வேலை செய்கிறது தான் என்ன ஒழுங்கோ? நாலு நாளாய் ஏன் கேட்காமலிருந்தார்? (இதை உரத்த குரலில் சொல்ல அவருக்குத் தைரியமில்லை.)

**கந்தசாமி:** மண்வெட்டி எடுத்துக் கொண்டு கூலி வேலை செய்யப் போகவேண்டியவன் எல்லாம் தாலுகாக் கச்சேரிக்குள் நுழைந்துகொண்டு நம்ம பிராணனை வாங்குகிறான்!

**வேங்கடராமய்யர்:** (டைபிஸ்டு ஏதோ சொல்ல வாய் எடுக்கிறார். அவரைக் கை அமர்த்தி, மெல்லிய குரலில்) பேசாமல் இரும் ஐயா, எரிமலை இதோடாவது அடங்கட்டும். அந்த மனுஷன் கோபக்காரன் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயந் தானே. அவன் ஏதாவது கொடுத்தால் நாலு தட்டுத்

தட்டி மூஞ்சியில் எறிந்து விடுமே. இந்தச் சனியன் வேறு எங்காவது தொலையட்டும், நம்மால் இதைக் கட்டிக்கொண்டு அழ முடியாது என்று எத்தனையோ தடவை கலெக்டருக்கு எழுதிப் பார்த்தாச்சு; பலிக்க வில்லை. நம்ம கழுத்திலேயே தான் கட்டி விட்டான், கலெக்டர். சனியன்! இருபது வருஷம் தாலுகா ஆபீஸிலே வேலை பார்த்தும் இந்த மனுஷனுக்கு இன்னும் கோபம் போகவில்லையே! அதுதான் விநோதம்!

## மூன்றும் காட்சி

**இடம்:** கந்தசாமி செட்டியார் வீடு

[கந்தசாமி செட்டியார் சில நாட்களாய்க் காய்ச்சலாய்ப் படுத்திருக்கிறுர். அவரைப் பார்ப்பதற்காகத் தாலுகாபீஸ் குமாஸ்தாக்கள் ராமச்சந்திர ஐயரும், நாராயண ராவும் வருகிறுர்கள்.]

**நாராயண ராவ்:** (வீட்டிற்கு வெளியில் மெல்லிய குரலில்) எனக்கென்னவோ இந்த மனுஷனைப் பார்க்கப் போவதற்குக் கொஞ்சங் கூட இஷ்டமில்லை. இங்கும் என்னமாவது தாறுமாருய்க் கத்துவான். சுகமாயிருந்தாலாவது நாமும் என்னத்தையாவது பதிலுக்குச் சொல்லலாம். சீக்குக்காரனிடம் எப்படிச் சொல்வது? ஏதாவது தப்பித் தவறிச் சொன்னுல் அவனுக்கு மேலும் கோபந்தான் வரும்.

**ராமச்சந்திர ஐயர்:** நாம் போய்ப் பார்க்கா விட்டால் இன்னெரு ஆபத்து இருக்கிறது. அதை நினைத்துப் பார்த்தீரா? நாளைக்கு ஆபீசுக்கு வந்ததும் கத்துவான்! நான் சீக்காய்க் கிடந்தேனே, ஒரு கழுதையாவது நான் இருக்கேனு, செத்து விட்டேனு என்று ஒரு முறை வந்து பார்த்ததா என்று ஆபீஸ் முழுதுங் கதறுவான்! வந்தது வந்து விட்டோம். எதுக்கும் பார்த்து விட்டுப் போவதுதான் நல்லது.

**நாராயண ராவ்:** என்ன விருந்தாலும் மனுஷனுக்கு இத்தனை கோபம் வரக் கூடாதய்யா!

ராமச்சந்திர ஐயர்: இத்தனைக் கோபத்திற்கும் காரணம் என்ன தெரியுமா? அவன் காரம் குறைவாகச் சாப்பிடுகிறானாம்!

(இருவரும் சிரித்துக் கொண்டே கந்தசாமி செட்டியாரின் வீட்டிற்குள் நுழைகிறார்கள். செட்டியார் ஒரு படுக்கையின் மீது படுத்துக் கொண்டிருக்கிறார். இருவரும் சிரிப்பை அடக்கிக் கொண்டு முகத்தை ஒரு மாதிரி வைத்துக்கொள்ள முயற்சித்துக் கொண்டு, அவருடைய படுக்கையை நெருங்குகிறார்கள்.)

நாராயண ராவ்: உங்கள் ரஜா விண்ணப்பம் வந்ததி லிருந்து எனக்கு ஆபீஸில் இருப்பே கொள்ள வில்லை. உங்களைப் பார்க்க வேண்டும், பார்க்க வேண்டும் என்று ஆவல். எங்கே முடிகிறது? இன்றைக்கு எப்படியாவது பார்த்து விட்டு வருவது என்று கிளம்பினோம். உடம்புக்கு என்ன? இப்பொழுது எப்படி இருக்கிறது? துரும்பாய் இளைத்து விட்டீர்களே!

ராமச்சந்திர ஐயர்: வரத்தான் முடியவில்லை. என்றாலும் உங்களைப் பற்றி அடிக்கடி விசாரித்துக் கொண்டேன். மனசு கேட்கிறதா? வயிற்றோட்ட மாமே, இப்பொழுது சௌகரியமா யிருக்கிற தல்லவா? ஒரு நாளைக்குப் பத்துப் பதினைந்து தடவை போயிற்றாமே! அதுதானே இப்படி மெலிந்து விட்டீர்கள்!

கந்தசாமி: வயிற்றோட்டம் ஒன்று மில்லையே! யார் சொன்னது? (ராமச்சந்திரய்யர் விழிக்கிறார்.)

ஜுரந்தான்; எழெட்டு நாளாய்ப் பொறுக்க முடியவில்லை. கை, கால் குடைச்ச லிருக்கிறதே; ஐயோ! அதை ஏன் கேட்கிறீர்கள்?

நாராயண ராவ்: பொறுக்க முடியாது, ஐயா, பொறுக்க முடியாது! நீங்களா யிருக்கக்கண்டு இவ்வள வாவது பொறுத்துக் கொள்கிறீர்கள். எனக்கு இரண்டு நாள் ஜுரம் வந்தது, அப்பா நான் பட்ட பாடு! அதை ஏன் கேட்கிறீர்கள்! ஈஸ் வரனுக்குத் தான் தெரியும்!

ராமச்சந்திர ஐயர்: நீங்கள் இங்கே இப்படி இத்தனை நாளாய் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறீர்களே, ஆபீசுக்குப் பெரிய மனுஷராய் ஒருவர் இருக் கிறாரே, ஹெட் அக்கவுண்டெண்டு! நீங்களும் அவருக்கடுத்த ஸ்தானத்தில் இருப்பவர் தானே உங்களை ஒரு முறை வந்து பார்த்தாரா?

நாராயண ராவ்: அவர் ஏன் வந்து பார்க்கிறார்? ஆபீஸ் உண்டு, அவருண்டு, அவர் வேலையுண்டு. ஆபீஸ் காகிதங்களையும், கணக்குகளையும் கட்டி மாரடிக் கவே அவருக்குச் சரியாய்ப் போய் விடுகிறதே! எந்நேரமும், இருபத்திநாலு மணி நேரமும் ஆபீஸ்தான். ஆபீஸே தியானம்! ஆபீஸே பேச்சு! ஆபீஸே காரியம்!

ராமச்சந்திர ஐயர்: இந்த மாதிரி கொஞ்சங்கூட ஈரமில் லாத மனுஷனை நான் எங்குமே பார்த்ததில்லை ஐயா!

கந்தசாமி: பாவம், அவரை ஏன் குறை சொல்கிறீர்கள்? அவர் நல்ல மனிதர், ஸார்.

(கந்தசாமி செட்டியாரை மற்ற இருவரும் சற்று ஆச்சரியத்துடன் நோக்குகிறார்கள்.)

நாராயண ராவ்: வைதீகப் பிராமணர் ஆச்சே, பூஜை புனஸ்காரம் உண்டோ, அதுவுங்கூட அவருக்கு இல்லையோ தெரியவில்லை.

ராமச்சந்திர ஐயர்: பூஜை ஏது, புனஸ்காரம் ஏது? அவருக்கு ஆபிஸ் தான் பிரம்மா, ஆபீஸ் தான் விஷ்ணு, ஆபீஸே ருத்ரன்! நான் சொல்கிறேன், கேளும். அவர் சர்க்காருக்கு எப்படி உழைக்கிறாரோ, அதில் பாதி சிரத்தையுடன் ஈஸ்வரனைப் பூஜித்தால் போதும். இதற்குள் அவருக்கு மோக்ஷம் கிடைத்திருக்கும்!

நாராயண ராவ்: ஆனால் இப்போது அவருக்குக் கிடைத்திருப்பதெல்லாம் மாதம் அறுபத்து நான்கு ரூபாய் சம்பளந்தான்! (சிரிக்கிறார்.)

கந்தசாமி: இப்படி எல்லாம் நாம் நினைக்கவுங் கூடாது, பேசவுங் கூடாது. நான் அவரிடம் ஓர் அரும் பெருங் குணத்தைக் காண்கிறேன். அவர் ஊதியத்தைக் கருதிச் செய்கிறாரோ, கருதாமல் செய்கிறாரோ. ஊதியங் கருதிச் செய்வதாகவே வைத்துக் கொள்வோம். என்றாலும் எடுத்துக் கொண்ட வேலையை எவ்வளவு சிரத்தையுடன் செய்கிறார்! 'பற்று மற்றொன்றில்லேன்' என்கிறார்களே. அதைப்போல் அவர் மக்களைப் பற்றிக் கவலைப்படுகிறாரா, மனைவியைப் பற்றிக் கவலைப்படுகிறாரா? பாவம்! எல்லாருக்கும் முன்னால் அவர் ஆபீசுக்கு வந்து விடுகிறார்! எடுத்துக் கொண்ட

வேலையுடன் அவர் இரண்டறக் கலந்து விடுகிறாரே! இவை எல்லாம் போற்றுதற்குரிய குணங்களில்லையா? என்னைப் பார்க்க வராவிட்டால் என்ன சார் கெட்டுப் போகுது? ஐயோ! பாவம்!

(ஆச்சரியம் பொங்க ராமச்சந்திர ஐயரும், நாராயண ராவும் சிறிது நேரம் மௌனமாயிருக்கிறார்கள்.)

**கந்தசாமி:** ஆபீசில் என்ன விசேஷம்? ஏதாவதுண்டா?

**நாராயண ராவ்:** நான் தற்புகழ்ச்சி செய்கிறேன் என்று நீங்கள் நினைப்பீர்கள். ஆனால் நான் உண்மையைச் சொல்கிறேன். நீங்கள் இல்லாமல் ஆபீஸ் வெறிச்சோடி யிருக்கிறது!

**ராமச்சந்திர ஐயர்:** விசேஷம் என்ன, விசேஷம்? அந்த மொச்சியை பீ. மெமோக் கிளார்க் அடித்து விட்டார்!

**நாராயண ராவ்:** அவன் பண்ணினதும் அநியாயந்தான், ஐயா! (கந்தசாமி செட்டியாரை நோக்கி) நீங்களானால் அவனுடைய வேலைக்கே உலை வைத்திருப்பீர்கள்.

**கந்தசாமி:** ஏன், என்ன செய்தான்?

**நாராயண ராவ்:** அரைமணி நேரம் இருட்டில் உட்கார்ந்து கொண்டு 'விளக்கு! விளக்கு!' என்று அலறிக் கொண்டிருக்கிறார். கொண்டு வரவில்லை. வைத்தார் ஓர் அறை!

கந்தசாமி: ஐயோ பாவம்! வேலைக்காரப் பையன்களை இப்படி எல்லாம் கொடுமையாக நடத்தக் கூடாது, சார். அவனும் நம்முடைய பையன்களைப் போலத்தானே, ஐயா? அவனுக்கென்ன வயதாகி விட்டது? அவனுடைய வயதுள்ள நம்ம பிள்ளைகளெல்லாம் நொண்டித் தட்டும், கிளித்தட்டும், விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். பாவம்! ஏதோ வயிற்றுப் பாட்டுக்காக வேலைக்கு வந்திருக்கிறான். இதை எல்லாம் நாம் கொஞ்சங் கூட நினைத்துப் பார்ப்பதில்லை, சார். கோபம் இருக்கிறதே, அதனால்தான் மனிதன் மிருகமாகிறான். பி. மெமோக் கிளார்க் எப்பொழுதுமே கொஞ்சம் முன் கோபி!

(சமயலறையில் சுமார் பத்து வயதுள்ள அவருடைய புதல்வன் அழும் சத்தம் கேட்கிறது.)

கந்தசாமி: (சனஸ்வரத்தில்) கணபதி ஏன் அழுகிறான்? யார் அடித்தது?

தெய்வயானை: அடிக்காமல் என்ன செய்யச் சொல்கிறீர்கள்? உங்களுக்குச் சவ்வரிசிக் கஞ்சி காய்ச்ச வேண்டுமென்று, அரைமணி நேரமாய் சர்க்கரை டப்பாவைத் தேடுகிறேன், காணோம். இவன் எங்கேயோ கொண்டுபோய் வைத்து விட்டான்.

கந்தசாமி: அதற்குச் சிறு பையனை அடிப்பானேன்? இன்னுங் கொஞ்ச நேரந் தேடினால், அகப்படுகிறது. வீட்டிற்குள்ளே தானே வைத்திருப்பான்? இந்த வீட்டிற்குள்ளே ஒரு சாமானை எடுக்க முடியாதா? கொலம்பஸ் கடல்களெல்லாம்,

சமுத்திரங்கள் எல்லாம் அலைந்து அமெரிக்காவைக் கண்டு பிடித்தாலும்!

தெய்வயானை: சர்க்கரை டப்பா அமெரிக்கா அளவு பெரிதில்லை!

கந்தசாமி: வீடும் அட்லாண்டிக் சமுத்திரம் அளவு பெரிதில்லை! (முன்னால் உட்கார்ந்திருப்பவர்களைப் பார்த்து) மனிதர்களுக்கு ஏன்தான் இப்படிக் கோபம் வருகிறதோ, தெரியவில்லை. பாவம்! அவளைச் சொல்லவும் குற்றமில்லை. எனக்குச் சீக்கிரம் கஞ்சி போட்டுக் கொண்டுவர வேண்டுமே என்று அவளுக்கு ஆவல். அந்த ஆவலினால் குழந்தையைப் போட்டு அடிக்கிறாள்!

(இருவரும் ஒருவரை ஒருவர் ஆச்சரியத்துடன் நோக்குகிறார்கள். அந்தசமயம் டாக்டர் வரவே அவர்கள் செட்டியாரிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியேறுகிறார்கள்)

நாராயண ராவ்: (தெருவில் நடந்துகொண்டே) ஐயர்வாள்! நாம் இன்று கடுங்கோபி கந்தசாமி செட்டியாரைத்தான் பார்த்து விட்டு வருகிறோமா அல்லது வேறு யாரையுமா? என் கண்களை என்னால் நம்ப முடியவில்லை.

ராமச்சந்திர ஐயர்: நான் நேரே இப்பொழுது டாக்டர் வீட்டிற்குத்தான் போகவேண்டும்! என் கண்ணாடியை உடனே மாற்றிக்கொள்ள வேண்டும்!

நாராயண ராவ்: மனித இயற்கை மிக விசித்திரமா யிருக்கிறது. எந்த மனிதன் எந்தச் சமயத்தில் எப்படித்

திருந்துவானென்று ஒருவராலும் சொல்ல முடியாது.

**தெய்வயானை :** (வீட்டிற்குள் சமையலறையில்) துருவாசரா யிருந்த என் கணவர் ஏன்தான் இப்படி தர்ம புத்திரராய் மாறிவிட்டாரோ? இது எதன் சூசகமோ தெரியவில்லை!

# நான்காம் காட்சி

*[கந்தசாமி செட்டியார் சுகமடைந்துவிட்டார். அன்று ஆபீசுக்குச் செல்லவேண்டும். ஸ்நான அறைக்குக் குளிக்கச் செல்லுகிருர்.]*

**கந்தசாமி :** வெந்நீர் இவ்வளவு சூடாயிருக்கக் கூடாது. என் உடம்பிற்கு ஆகாது என்று நாலாயிரத்து நானூத்தி நாப்பத்து நாலு தடவை சொல்லியாச்சு! தண்ணீரை இப்படிக் கொதிக்க வைத்து, ஏன்தான் என் பிராணனை வாங்குகிருயோ, தெரியவில்லை!

**தெய்வயானை :** பழைய குருடி கதவைத் திறடி! நான் என்னவோ ஏதோ என்று பயந்து விட்டேன்! இப்படித் தருமராய், சாந்தமே அவதாரம் எடுத்தவராய் மாறிவிட்டாரே, இவரோடு எப்படி நாம் குடித்தனம் நடத்தப் போகிருேம் என்று பயந்து போனேன்! நல்ல வேளை ஈசன் காப்பாற்றினர்!

**கந்தசாமி :** (தனக்குள்) ஐயோ! எனக்கு ஏன்தான் இப்படி எடுத்ததற்கெல்லாம் கோபம் வருகிறதோ, தெரியவில்லை. காய்ச்சலாய்ப் படுத்திருந்த போது நன்ருயிருந்தேனே! அப்பொழுது என் உள்ளம் எவ்வளவு அமைதியாயிருந்தது? இனி கோபிக்கவே கூடாது. கோபம் பொல்லாது!

*(ஸ்நானத்தை முடித்துக் கொண்டு, பூஜைக்குப் பின் சாப்பிட உட்காருகிருர். அன்றையச் சட்னி அதிகக் காரமாகத்தானிருக்கிறது. கோபம் வருகிறது.*

ஆயினும் அதை அடக்கிக் கொண்டு, சாப்பிட்டு விட்டு எழுந்து, கை யலம்பி, ஆபீஸ் உடைகளை மாட்டிக் கொள்கிருர். ஆபீசுக்கு நேரமாகிவிட்டது. குடையைத் தேடுகிருர். அது அகப்படவில்லை.)

**கந்தசாமி :** வைத்த சாமான் வைத்த இடத்தில் என்றைக்கு இருக்கிறதோ, அன்றைக்கல்லவா இந்த வீடு உருப்படியாகும்! அந்தப் பயல் எங்கே? அவன்தான் எடுத்து எங்காவது வைத்திருப்பான். நன்ருய் உதைக்க வேண்டும். ஐயோ! ஆபீசுக்கு நேரமாய் விட்டதே. மிதி, மிதி என்று மிதிக்க வேண்டும். அடே கணபதி! கணபதி இ! இ! இ!

**தெய்வயானை :** கொலம்பஸ் கடல்களையும், சமுத்திரங்களையுங் கடந்து சென்று அமெரிக்காவை.........

**கந்தசாமி :** ஐயோ! ஆம், நிஜந்தான். எனக்கு ஏன்தான் இப்படிக் கோபம் வருகிறதோ, தெரியவில்லை. கோபம் பொல்லாது. ஐயோ! எனக்கு மீண்டும் காய்ச்சல் வராதா? அப்பொழுது நான் நன்ருயிருந்தேனே! என் மனம் எவ்வளவு சாந்தியாயிருந்தது? உடம்பிற்கு ஜுரம் நல்லதோ, கெடுதியோ, ஆனல் உள்ளத்திற்கு மிகவும் நல்லது! மனதிற்கு அது சிறந்த டானிக்! ஆ! எனக்கு மீண்டும் நோய் வராதா?

(திரை)

# குடியனூர்ச் சந்தை

## பாத்திரங்கள்

இராமநாதன் செட்டியார்

அவருடைய மனைவி

## முதற் காட்சி

இடம் : வீடு.] [காலம் : இரவு 9 மணி

**இராமநாதஞ் செட்டியார்:** கால் வலிக்கிற வலி சொல்லி முடியாது. மாட்டிற்கும் மனிதனுக்கும் அலைச்சல்தான் மிச்சம்!

**மனைவி :** மாடு விற்கலியாக்கும். குடியனூர்ச் சந்தை பெரிய சந்தை என்கிறார்களே?

**இராமநாதஞ் செட்டியார்:** பெரிய சந்தை! எல்லாம் நேரில் போய்ப் பார்த்தால்தான் அதனதன் வண்டவாளந் தெரியுது! இந்தக் காலைக் கொஞ்சம் அமுக்கு. வலி பொறுக்க முடியவில்லை.

**மனைவி :** (காலை அமுக்கிக் கொண்டு) நான் ஒருநாள் பஸ்ஸில் வரும்போது பார்த்தேன். சந்தையிலே ஜனங்கள் அதிகமாகத்தான் கூடியிருந்தார்கள்.

**இராமநாதஞ் செட்டியார் :** சந்தையாம் சந்தை! பிரமாதச் சந்தை! நம்ம மாட்டை விலை கேக்கிறதுக்கு அங்கே நாலு பேருண்டா?

**மனைவி :** நாலு பேர் கூட இல்லாத சந்தை அதென்ன சந்தையோ? அப்படியானா நம்ம பெரியநாயக்கன்பாளையம் சந்தை தேவலை இண்ணு சொல்லுங்க.

**இராமநாதஞ் செட்டியார் :** நம்ம சந்தைக்குக் காலில் கட்டியடிக்க வருமா அது? பெரிய சந்தையாம்!

இண்ணைக்கி நம்ம மாட்டை நூறு பேர் ஆயிரந் தடவை பார்த்திருப்பான். அதிலே நாலு பேராவது விலை கேக்கணுமே. இடது பாதத்தை நல்லாப் பிடிச்சு விடு. இந்த வலியா வலிக்கும்!

**மனைவி:** (இடது காலை லேசாய்ப் பிடித்து விட்டுக் கொண்டு) விலை கேக்காம பின்னே என்னதான் செய்யிருங்க?

**இராமநாதஞ் செட்டியார்:** பன்னண்டு மைல் நடந்தாலுந் தான் என்ன, இப்படியா மேல், கால் எல்லாம் வலிக்கும்! இந்த முதுகைக் கொஞ்சம் பிடித்து விடு.

**மனைவி:** (முதுகைப் பிடித்துக் கொண்டு) விலை கேக்காம என்னதான் பண்ருங்க?

**இராமநாதஞ் செட்டியார்:** ஒவ்வொரு மாடாப் பல்லைப் பல்லைப் பிடித்துப் பார்த்துவிட்டுத் தங்கள் பல்லையுங் காட்டி விட்டுப் போருங்க!

**மனைவி:** அப்படி எத்தனை மாடு வந்திருக்குது?

**இராமநாதஞ் செட்டியார்:** அது வந்திருக்குது பசுவிலே இரு நூறும், எருதிலே ஆயிரமும்.

**மனைவி:** சந்தை பெரிசுதான் போலிருக்கு!

**இராமநாதஞ் செட்டியார்:** மாடு வாங்கினதும் போதும். இப்பப் படுகிற கஷ்டமும் போதும்! இதை எப்படியாவது வித்துத் தொலைக்கணுமே என்று இப்பத் தோணுது.

மனைவி: நம்ம மாட்டிற்கென்ன தங்கத்திற்கு? யாரும் நாம் வாங்கின விலைக்கு அதிகமாகவே கொடுத்து வாங்கிக் கொள்வான்.

இராமநாதஞ் செட்டியார்: அதை வாங்கின புதிசிலே நீ மட்டுமல்ல, எல்லோரும் அப்படித்தான் சொன்னார்கள். இப்பொழுது அதற்கு நூறு குறை சொல்லுகிறான்கள் திருட்டுப் பயல்கள்!

மனைவி: நம்ம மாட்டிற்கு எவன் குற்றஞ் சொல்கிறவன்?

இராமநாதஞ் செட்டியார்: எல்லாருந்தான் சொல்கிறான். நிறம் காரியாம், கடைக்கண் புள்ளியாம், வாலில் சுளியாம்!

மனைவி: அப்படி என்றால் என்னவாம்?

இராமநாதஞ் செட்டியார்: அது ஒரு பயலுக்குந் தெரியலை. அது ஆகாது என்றுதான் சொல்கிறான்கள்.

மனைவி: அவன்களுக்கு ஆகாவிட்டால் போகட்டும். நம்ம வீட்டிலே இருந்திட்டுப் போகுது. ஒன்றுங் கெட்டுப் போய் விடாது.

இராமநாதஞ் செட்டியார்: இப்பொழுது அதைத் தவிர வேறு வழியுமில்லை. (தோளை நல்லாப் பிடிச்சு அமுக்கடியம்மா. ரணமா வலிக்குது.)

மனைவி: மாடு விக்காட்டாப் போகுது. வீட்டுக்குக் காய் கறியாவது வாங்கி வரப்படாதோ?

இராமநாதஞ் செட்டியார்: வேணும் விழையுமென்று பிடிச்சு அமுக்கடியம்மா. வலி பிராணன் போகிறது!

**மனைவி:** பிடிச்சுத் தானே அமுக்றேன். இதைவிட எப்படி அமுக்கச் சொல்றீய? அது போகட்டும். பையை வெறிசாக் கொண்டு வந்திருக்கயளே. காய் கறியாவது வாங்கிக் கொண்டு வரப் படாதா?

**இராமநாதஞ் செட்டியார்:** குடியலூர்ச் சந்தையிலே காயுங் கறியும் வந்து குவிஞ்சு கிடக்குது! அதை நான் வாங்காம வந்திட்டேன்! பொக்கிப் பயல் சந்தை எங்கிறேனே!

**மனைவி:** கத்திரிக்காய், வாழைக்காய் கூடவா இல்லாமப் போச்சு? நீங்க பேசறது அதிசயமாத் தானிருக்கு. நம்ம பயலுக்கு இரண்டு ஆரஞ்சிப் பழமாவது வாங்கி வருவது?

**இராமநாதஞ் செட்டியார்:** ஒரு சொத்தைக் கத்திரிக் காயைக் காணோம். இவள் ஆரஞ்சிப் பழத் துக்குப் போயிட்டாள்; நல்லாப் பிடிச்சு அமுக் கிண்ணு அப்பவே பிடிச்சுச் சொல்லிக்கிட்டு இருக்கேனே. நீ இவ்வளவு நேரமா அமுக்கின திலே ஒரு துளி வலி கொரஞ்சிருக்கா?

**மனைவி:** (கொஞ்சம் நன்ருய்ப் பிடித்து விட்டுக் கொண்டு) அதெல்லாந் தான் ஒண்ணும் வாங்கலே. குடிய ஊரிலே செவந்திப் பூ மலிவா விக்குமே. எனக்கு அரையணுப் பூவாவது வாங்கி வரப்படாதா?

**இராமநாதஞ் செட்டியார்:** காலையில் வீட்டில்தின்ற இட் டலியோடு புருஷன் வந்திருக்கானே. அவனுக்கு உடனே சோற்றைப் போடுவோம் என்பதில்லே.

விளக்குமாறு வாங்கினியா, செருப்பு வாங்கினியா என்று அரைமணி நேரமாய்ப் பிராணனை வாங்கிறுள்! (எழுந்து) நீ முதுகமுக்கி நாசமாப் போனது போதும். சோற்றைப் போடு.

**மனைவி:** (ஏதோ முனகிக் கொண்டு) அதெல்லாம் எடுத்து வைத்து அரை மணிக்கு மேலாச்சு. நீங்க மேல் அமுக்கச் சொன்னியண்ணு அமுக்கிக் கிட்டிருந்தேன். அதுக்குள்ளே ஏன் இப்படிச் சீறி விழுகிறீய?

**இராமநாதஞ் செட்டியார்:** (இலைக்கு முன்னல் போயுட்கார்ந்து அதில் ரவாக் கேசரியும் வடையும் பரிமாறப்பட்டிருப்பதைப் பார்த்து) இந்த இழவெல்லாம் இண்ணைக்கி யார் கேட்டா? சாதத்தைப் போடு.

**மனைவி:** கேசரியும் வடையுந்தான் இண்ணைக்கிச் செய்திருக்கு, சாதம் வடிக்கலே.

**இராமநாதஞ் செட்டியார்:** காலையிலிருந்து ஒண்ணும் சாப்பிடாமல் பட்டினியாய் வருவானே. அரைக்கால் படி அரிசியை வடிப்போமென்று ஏன் அறிவில்லாமல் போய் விட்டது?

**மனைவி:** (டம்ளரில் தண்ணீர் எடுத்து 'டக்' என்று செட்டியாருக்குப் பக்கத்தில் வைத்து விட்டு) மாடு விற்கலே, எதை எடுத்தாலுங் கோபங் கோபமா வருது! அதற்கு நானு பழி?

**இராமநாதஞ் செட்டியார்:** எனக்குக் கேசரியும் வேண்டாம் வடையும் வேண்டாம். (இலையோடு அப்பால் இழுத்து எறிந்து விட்டுப் போய்க் கோபத்துடன் படுத்துக் கொள்கிறுர்.)

## இரண்டாம் காட்சி

**பாத்திரங்கள்:** இராமநாதஞ் செட்டியார், அவருடைய மனைவி.

**இடம்:** வீடு.

**காலம்:** ஏழு நாட்களுக்கப்புறம் ஒரு நாள் மாலை சுமார் ஆறு மணி.

[செட்டியார் குதிரை வண்டியில் வந்து வீட்டிற்கு முன்னால் இறங்குகிறார். வண்டிக்காரன் வித வித மான அனேக சாமான்களை வண்டியிலிருந்து வீட்டிற்குள் கொண்டுவந்து வைக்கிறான்.]

**மனைவி:** மாடு வித்து விட்டது போலும். என்ன விலைக்கு வித்தீர்கள்?

**இராமநாதஞ் செட்டியார்:** (புன்சிரிப்புடன்) லாபந்தான்.

**மனைவி:** (ஆத்திரத்துடன்) விலை?

**இராமநாதஞ் செட்டியார்:** (சந்தோஷத்துடன்) பத்து ரூபாய் லாபம்!

**மனைவி:** (சிரித்த முகத்துடன்) நான் அண்ணைக்கே சொன்னேனே, நம்ம மாட்டை விற்பதில் ஒரு கஷ்டமுமிராதின்னு.

**இராமநாதஞ் செட்டியார்:** அதற்குச் சந்தையிலே எவ்வளவு கிராக்கி தெரியுமா? தங்கமான மாடில்ல? அதை ஏன் வித்தோமின்னு இப்பத் தோணுது. இனி அம்மாதிரி மாடு கிடைப்பது வெகு கஷ்டம்!

**மனைவி:** பின்னே காரி நிறம் என்று அண்ணைக்கிச் சொன்னதாக...

இராமநாதஞ் செட்டியார்: காரிநிறமானல் என்ன? பக்கா வுக்கு ரெண்டு படி பால் கறக்கிதா, லேசா?

மனைவி: கடைக்கண் புள்ளி என்று...

இராமநாதஞ் செட்டியார்: கடைக்கண் புள்ளியாவது, கழுதைக்குட்டியாவது!

மனைவி: வாலில் சுளி?

இராமநாதஞ் செட்டியார்: எவன் சொன்னது வாலில் சுளி என்று? நம்ம மாட்டுக்கு வாலில் சுளி இண்ணு சொல்றவனுக்குக் கண் பிடரியில்தான் இருக்கணும்.

(செட்டியார் வாங்கி வந்திருக்கும் சாமான்களை ஒவ்வொன்ருய் மனைவி பார்க்கிருள்.)

மனைவி: ஆரஞ்சிப் பழம் வாங்கி வந்திருக்கிய போலிருக்குதே?

இராமநாதஞ் செட்டியார்: ஆமாம். ஆப்பிளும் ஒரு டஜன் வாங்கிவந்திருக்கிறேன். எல்லாவற்றையும் எடுத்துக் காற்ருட வை.'

மனைவி: எங்கே வாங்கினீர்கள்? சந்தையில் மாட்டை வித்திட்டுக் கோவைக்குப் போய்விட்டு வருகிறீர்களா?

இராமநாதஞ் செட்டியார்: கோவை போவானேன்? சந்தையில்தான் பழங்கள் கூடை கூடையாய் வந்திருக்குதே!

மனைவி : காய்கறி எதற்கு இத்தனை அள்ளிக்கொண்டு வந்திருக்கிறீர்கள் ? அவ்வளவும் அழுகித்தானே போகும் ?

இராமநாதஞ் செட்டியார் : அழுகுவானேன் ? நன்றாய்க் கை குளிரப் போட்டுச் சமையல் செய். மீதியிருந்தால் அடுத்த வீடு, அண்டை வீட்டுக்கெல்லாம் கொடு. குடியலூர்ச் சந்தையில் காய்கறி கொள்ளை மலிவு ! குவியல் குவியலாய்த்தான் குவித்திருக்கிறான்கள் !

மனைவி : அத்தனை காய்களும் விக்கணுமே ?

இராமநாதஞ் செட்டியார் : பதினாயிரம் ஜனங்களுக்கு மேல் கூடுகிற அந்தச் சந்தையில் இந்தக் காய்கள் ஒரு நொடிக்குள் விற்று விடாதா ?

மனைவி : ரோஜாப்பூ எதற்கு இத்தனை வாங்கிக் கொண்டு வந்திருக்கிறீர்கள் ? நிமிஷத்தில் உதிர்ந்து வாடிப்போய்விடுமே !

இராமநாதஞ் செட்டியார் : வாடினாலும் என்ன ? ரோஜா ரோஜாதான் ! ரஸம் வைக்கலாம். ஏன் அடுத்த வீட்டு ஜானகி, கமலம் இவர்களுக்கெல்லாம் கொடேன் ?

மனைவி : குடியலூர்ச் சந்தை பெரிய சந்தைதான் போலிருக்கு !

இராமநாதஞ் செட்டியார் : இதற்கு யாரையாவது கேக்கவா வேண்டும் ! இந்தப் பக்கத்திற்கே அது பெரிய சந்தையல்லவா ?

**மனைவி :** நம்ம சந்தைக்கு அதைக் காலில்.........

**இராமநாதஞ் செட்டியார் :** சே! சே! யார் சொன்னது அப்படி? குடியலூர்ச் சந்தை எங்கே, நம்ம பொக்கிப் பயல் சந்தை எங்கே, கிட்டவா இருக்குது? சரி, பசி எடுக்கிது, என்ன வைத் திருக்கிறாய்?

**மனைவி :** களைத்து வருவீர்களே என்று சாதந்தான் வடித்திருக்கிறேன். போடட்டுமா?

**இராமநாதஞ் செட்டியார் :** சோற்றைத் தின்று தின்று சலித்துவிட்டது. ஏதாவது பலகாரம் பண்ணி யிருக்கக் கூடாதோ?

**மனைவி :** (புன்சிரிப்புடன்) இண்ணைக்கி மாடு வித்துவிடு மிண்ணு நான் ஜோஸ்யமா கண்டேன்?

**இராமநாதஞ் செட்டியார் :** சரி, என்னை ஒண்ணுங் கேலி செய்ய வேண்டாம். மைசூர்ப் பாகும், ஜிலேபியும் ஒரு சேர் அந்தப் பையில் இருக்கிறது. அதை எடுத்துக்கொண்டு, ரெண்டு ஆப்பிளையும் நறுக்கிக் கொண்டு வா.

(திரை)

# இந்தியச் சிறு கதைகள்

[ஒன்பது இந்திய பாஷைகளிலிருந்து மொழி பெயர்த்துத் தொகுத்த சிறந்த கதைகள் அடங்கியது]

மொழிபெயர்ப்பு :

சு. குருசாமி பி. ஏ., எல். டி.

முகவுரை — சென்னைக் கல்வி மந்திரி
கனம் தி. சு. அவிஞசிலிங்கம் அவர்கள்

விலை ரூ. 2—8—0 தபாற் செலவு 0—5—0

1. ராஜபுதானி
'தூமகேது' (குஜராத்தி)

2. ஏழைத் தம்பதிகள்
திரிலோகநாத கோஸ்வாமி (அஸ்ஸாமி)

3. சத்திரத்தில் சிப்பாய்
ஜைனேந்திர குமார் (ஹிந்தி)

4. அத்தி பூத்தது
சௌகத் தானவி (உருது)

5. நியாயம்
புரொபசர் என். எஸ். பட்கே (மராத்தி)

6. கோதாவரியும் சிரித்தாள்
சிந்தா தீக்ஷிதுலு (தெலுங்கு)

7. தம்பி மகன்
சரத்சந்திர சாட்டர்ஜி (வங்காளி)

8. திருடனின் கடிதம்
கே. தாமோதரன் (மலையாளம்)

9. மிட்டாய்க்காரன்
கி. வா. ஜகந்நாதன் (தமிழ்)

10. தேசாந்திரி
சு. குருசாமி (தமிழ்)

---

## அருணோதய நிலையம்

வேலூர் :: சேலம்